பதிவு எண் 2041. மகாத்மா காந் ௵ தனிப்பிரதி விலை அணா ஒன்று



	ரூ. அ.
வருடசந்தா	3—0
6 மாத சந்தா	1—12

[வாரப்பதிப்பு.]

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்.

	ரூ. அ.
வெளி நாட்டிற்கு சந்தா ...	4—0
விளம்பரம் அங்குலம் 1-க்கு ...	0—8

மாலை 2 | ஈரோடு, அக்ஷய-௵ ஆவணி-௴ 6-உ (22—8—26) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 17.

உண்மையான கதர்

கெட்டியான கதர்!

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ் நாடுகாங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும் மேற்பார்வையாலும், அத்தாட்சி பத்திரத்துடன் நடைபெறுகின்றது கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

(காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்.

ஸ்ரீ காந்தி கதராலயத்தார் கை நூலால், கைத் தறியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள். எஸ். ராமநாதன்,

காங்கிரஸ் கதர் போர்டு காரியதரிசி.

விலாசம்:—ந. ராமசாமி. மானேஜர்,

ஸ்ரீ காந்தி கதராலயம், திருப்பூர்.

கதர்! கதர்!! கதர்!!!

தமிழ் நாடு கதர் போர்டாரால்

அத்தாக்ஷி பத்திரம் பெற்ற

சுத்த கதர் ஜவுளிகள்.

வெள்ளை பீஸ்கள், வேஷ்டிகள், துண்டுகள். துவால்கள், சால்வைகள், அச்சு துண்டுகள், பலரகம் வெள்ளை கலர் கோட்டிங்குகள், சீட்டிகள் எல்லா ரகங்களும் கைவசம் இருப்பிலிருக்கின்றன. விலை சாப்தாவுக்கு கீழ் கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

S. திருமலைசாமி செட்டி,

A. முருகேச முதலி.

No. 12 கச்சேரி வீதி, திருப்பூர்.

காங்கிரஸ் அத்தாக்ஷி பெற்ற சுத்தகதர்.

தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும், கிடைக்கும் விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும், கீழ் கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரிக்கு) 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்.

ஊத்துக்குளி S. I. Ry.

மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்.

1916-௵ ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சீர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேற்சியடைய மூன்று மாதம் ஆகும். தேற்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற் [illegible] தெரிந்துகொள்ளலாம்.

மதராஸ் [illegible]

மோட்டார் இ[illegible] க்ஸ்,

ம்மை[illegible]

திருப்பூர் சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா

விலாசம்:—

ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,

முத்துசாமி செட்டியார்,

கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

கத்தர் வியாபாரிகளுக்கு அறிக்கை.

தமிழ்நாடு கத்தர் போர்டின் அத்தாட்சிப்பத்திரம் பெற்றிருக்கிறது. எங்கள் கதர் ஸ்டோரில் எல்லா விதமான தினுசுகளும் தயாராகிறது. கதர் போர்டின் விலைக்கே கொடுக்கிறோம். அட்வான்சுடன் ஆர்டர் அனுப்புங்கள்.

கே. எஸ். ஆர். எம். ராமசாமி செட்டியார்,

கத்தர் ஸ்டோர் அமராவதிபாளையம்,

பொன்னுக்காளிபாளையம் போஸ்டு,

(திருப்பூர் மார்க்கம்.)

கட்டாயப்படுத்தப்படும் கைம்பெண் வாழ்க்கை.

தன் கொழுநனை இழந்து பூவுலில் அனுபவிக்க வேண்டிய இன்பந்துய்த்தற்கில்லாது கட்டாயப்படுத்தி கைம்பெண்களாயிருக்க வைத்தலைப் பற்றி மகாத்மா காந்தி "எங் இந்தியா" பத்திரிகையில் எழுதியிருப்பதாவது:—

ஸர். கங்காராம் அவர்கள் இந்தியாவிலிருக்கும் கைம் பெண்களின் தொகையை கணக்கெடுத்திருக்கிறார். மாகாண வாரியாகவும் புள்ளி விபரம் காண்பிக்கிறார். இந்தப் புள்ளி விவரம் சீர்திருத்தக்காரர் ஒவ்வொருவர் கையிலும் இருக்கவேண்டியதவசியம். ஆசார சீர்திருத்தம் எப்பொழுது செய்யப்பட வேண்டுமென்று ஸர். கங்காராம் அவர்கள் கூறும் முறையை எல்லோரும் ஏற்றுக்கொள்ளமுடியாது. அவர் கீழ்க்கண்டவாறு வரிசைக் கிரமமாய் குறிப்பிடுகின்றார். (1) ஆசார சீர் திருத்தம் (2) செல்வநிலை சீர்திருத்தம் (3) சுய ராஜ்யம் அல்லது அரசியல் விடுதலை.

ஸர். கங்காராம் அவர்களுக்கு முன்பு இருந்த ஆசாரசீர்த் திருத்தக்காரர்கள் அவரைப் போலவே ஊக்கங்கொண்டவர்கள். ஆனால் அவர்கள் முறை வேறு. ரானடே, கோகலே, சந்தாவர்க்கர், முதலியோர் ஆசாரத் திருத்தத்தைப் போலவே சுயராஜ்யமும் முக்கியமானது எனக் கருதினார்கள். லோகமான்ய திலகரும் ஆசார சீர்திருத்தத்துக்குக் குறைத்துப் பாடுபடவில்லை. ஆனால், அவரும் அவருக்குமுன் சென்றவர்களும் எல்லாத் திருத்தங்களும் ஒன்றன்பின் ஒன்றாக நடக்க வேண்டுமென்ற தேவையை உணர்ந்தவர்கள். உண்மையிலேயே மற்றவைகளைக் காட்டிலும் அரசியல் திருத்தம் அதிக விரைவில் நடக்க வேண்டுமென லோகமான்யரும், கோகலேயும் எண்ணினார்கள். நம்முடைய அடிமைத் தனத்தால் வேறு எவ்வகை வேலைக்கும் நாம் தகுதி யற்றவர்களென்பது அவர்களது நோக்கம்.

பொதுவாக இது போழ்து அரசியல் விடுதலை என்றால் பாமர ஜனங்கள் முன்னேறுவது என்று பொருள். தேசீய ஊக்கத்தின் எல்லாக் கிளைகளிலும் மாறுதல் ஏற்பட்டாலன்றி மேலே கூறப்பட்ட முடிவு தோன்றாது. ஒவ்வொரு சீர்திருத்தத்துக்கும் ஒரு விழிப்பு என்று பொருள். தூக்கத்தினின்றும் விழித்துக்கொண்ட ஜாதியார் வாழ்க்கையின் ஒரு துறையில் மட்டும் திருத்தத்தை வேண்டமாட்டார்கள். எனவே எல்லாத் துறைகளிலும் சீர்திருத்தம் ஒரேகாலத்தில் செய்தல் வேண்டும்.

சீர்திருத்தத்தின் வரிசைக் கிரமத்தைப் பற்றி நம்மிலெவரும் ஸர் கங்காராம் அவர்களுடன் வாதம் செய்ய வேண்டியதில்லை. அவருடைய அரசியல், செல்வநிலை திருத்த வழிகளை ஒருவர் ஒப்புக் கொள்ளாவிடினும் அவருடைய ஆசார சீர்திருத்த ஆவலை ஏற்றுக் கொள்ளாமலிருக்கமுடியாது. அவர் நமக்குக் கொடுத்திருக்கும் புள்ளி விவரம் பயங்கரமானது. குழந்தை விவாகத்தினாலும் கட்டாயவிதவைத்தன்மையினாலும் ஏற்படும் துயரத்தைக் காண்பிக்கும் புள்ளிவிவரங்களைக் கண்டு யாரால் அழாமலிருக்கமுடியும்? என்று அவர் கேட்கிறார். 1921 ஆண்டு ஜனத்தொகை கணக்கின்படி ஹிந்து கைம்பெண்களைப் பற்றிய புள்ளிகள் வருமாறு:—

5 வயதிற்குட்பட்ட விதவைகள்	11893.
5 லிருந்து 10 க்குள்பட்ட விதவைகள்	85037.
10 லிருந்து 15 க்குள்பட்ட விதவைகள்	232147
மொத்தம்.	326076

வேறு இரண்டு ஆண்டு ஜனத்தொகைக் கணக்கும் கொடுக்கப் பட்டிருக்கிறது. 1921–ம் ஆண்டுக் கணக்கு மற்றைய இரண்டு ஆண்டுகளைவிட மும்மடங்கு அதிகமாக இருக்கிறது. வேறு வகுப்பு விதவைகளின் எண்ணிக்கையும் கொடுக்கப்பட்டிருக்கிறது இவைகள் ஹிந்து குழந்தை விதவைகளுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை நன்கு காட்டுகின்றன. மதத்தின் பேரால் பசுவை காப்பாற்ற வேண்டுமெனக் கூறுகின்றோம் ஆனால் குழந்தை விதவையாகிய மனிதப் பசுவைக் காப்பாற்ற மறுக்கின்றோம். சமயச் சமாதானம் காட்ட முற்படுகின்றோம். ஆனால் மதத்தின் பேரால், மணமென்பது இன்னதென்று விளங்காதவர்களுக்கான குழந்தை விதவைகளின் பேரில்கட்டாய விதவைத்தன்மையை வற்புறுத்துகின்றோம். இவ்வாறு வற்புறுத்துதல் கொடிய குற்றமாகும். இதற்காக தினமும் நாம் துயரத்தை அனுபவித்துக்கொண்டு வருகிறோம். நம்முடைய மனச்சான்று விழித்துக் கொண்டிருக்குமாகில், பதினைந்து வயதிற்கு முன் கலியாணமே இருந்திராது. அதற்கு முன் விதவைத்தன்மை இராது. மேற்கூறிய 3 லக்ஷம் சிறுமிகளுக்கும் முறைப்படி கலியாணமாகவில்லை என்று நாம் உறுதியாகக் கூறுவோம். இத்தகைய விதவைத்தன்மைக்குசாஸ்திரத்தில் இடமில்லை. கணவனுடைய பிரியத்தை உணர்ந்து அதற்கெனத் தானாகவே கைம்பெண் நிலைமையை ஏற்றால், அது வாழ்க்கைக்கு அழகும் மதிப்பும் உண்டாக்கி, வீட்டைப் புனிதப்படுத்தி, மதத்தை உயர்த்திக் காண்பிக்கின்றது. மதத்தினாலோ, வழக்கத்தினாலோ கட்டாயப்படுத்தப்படும் விதவைத்தனம் கொடுமை கொண்டது. அதனால் ரகஸ்யமாக குற்றம் அதிகரிக்கின்றது. அது மதத்தை இழிவு படுத்துகின்றது.

நோயுள்ளவர்களும் 50 வயதிற்கு மேற்பட்ட கலியாணம் செய்து கொள்ளும்பொழுது—ஏற்கனவே ஒரு மனைவி இருக்கையிலும் கூட—இந்த கட்டாய விதவைத்தனம் நமக்கு அருவருப்பை உண்டாக்கவில்லையா? நம்முடைய ஹிந்து ஜனசமூகத்திடையே ஆயிரக்கணக்கான கைம்பெண்களிருக்கும் வரையில், வெடிச் சுரங்கத்தின் பேரில் நாம் உட்கார்ந்து கொண்டிருப்பதாகவே நினைத்துக் கொள்ளவேண்டும். அந்த வெடி சமயம் நேர்ந்தபோது வெடிக்கும். நாம் புனிதர்களாக வேண்டுமானால், ஹிந்து மதத்தைக் காப்பாற்ற வேண்டுமானால், இந்தக் கட்டாய வைதவ்யம் என்ற விஷயத்தை ஒழிக்க வேண்டும். குழந்தை விதவைகள் இருக்கும் வீட்டார், தைரியத்தைக்கொண்டு அவர்களுக்கு மணம் செய்விக்கவேண்டும். மறு மணமல்ல, ஏனெனில் உண்மையாகவே அவர்களுக்கு ஒருபொழுதும் மணம் நடக்கவில்லை.



திருச்சி ஜில்லா தமிழர் கழகம்.

12—8—26-உ யன்று தேசியத் தமிழர்கள் சிலர் கூடி பின் கண்ட முடிவு செய்துள்ளார்கள்.

1. தற்காலிகக்காரியதரிசியாக ஸ்ரீமான் ச. ம. சி. பரமசிவம் அவர்களைத் தேர்ந்தெடுக்கிறது. ஜில்லாப் பிரமுகர் கட்கு அழைப்புக் கடிதம் அனுப்பி 23—8—26 உ யன்று மாலை 6-மணிக்கு ஓர் கூட்டம் கூட்டி நிறைவேற்றற் கழகம் ஒன்று தேர்ந்தெடுக்கவும், விதிகள் தயாரிக்கவும் தீர்மானிக்கிறது.

2. பார்ப்பனரல்லாத தமிழர் சமூக முன்னேற்றத்திற்கான பல வழிகளிலும் அஹிம்சா தர்மத்திற்குட் பட்டு உழைத்து வருவதும், அன்னிய ஆடை, மது, தீண்டாமை, பார்ப்பனீயம் முதலியவற்றை விலக்குவதும் கழகத்தின் முக்கிய நோக்கங்களாயிருத்தல் வேண்டும். விபரமறிய விரும்புவோர் திரு. ச. ம. சி. பரமசிவம், பெரிய செட்டித்தெரு, உறையூர், திருச்சி, என்ற விலாசத்தாருக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம் என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

மதனகேசரி.

இணையற்ற மகா தாதுபுஷ்டி லேகியம்.

இது அபார சக்தி வாய்ந்தது. தேகம் வலுக்கும். மூளை, இருதயம், குண்டிக்காய்களுக்கு வலுவேற்றும். நரம்பு ஸ்தானங்களைப் பலப்படுத்தும். அபரிமிதமான தாது விருத்தி, இரத்த விருத்தி, போகசித்தி உண்டாக்கும். தாது புஷ்டிக்கு நிகரற்ற மகா உயர்ந்த சாலாமிசிரி சஞ்சீவி இதுவே.

1 டின் ரூ. 3. வி. பி. அணா 5.

பிராஜானுகூல ஔஷதாலயம் ஸ்ரீரங்கம்.

சென்னையில் குழுமிய சீர் பெருங் கூட்டம்.

"சுயராஜ்யத்தைவிட சுய மரியாதையே பிரதானம்."

"மகாத்மா காந்திக்கு மண்டையில் மூளையில்லை" என்று சொன்ன மகான் (!) இப்பொழுது காங்கிரசின் தலைவராய் விளங்குகிறார்.

திரு. இராஜகோபாலாச்சாரியாரின் இரகசியம்.

"சென்னையிலும் வங்காளத்தைப்போல் கலவரம் மூட்ட பார்ப்பனர்கள் முயலுகிறார்களா?"

திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கர் சொற்பொழிவு.

(சென்ற இதழின் தொடர்ச்சி.)

சென்னை திருவல்லிக் கேணியில் சென்ற ஜூலை மாதம் 31-ந் தேதியில் ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் ஒரு சிறு பிரசங்கம் செய்தார். அப்பிரசங்கத்திற்கு சுமார் 3000 பேர் வரையில் சகல வகுப்பார்களும் வந்து கூடியிருந்தார்கள் பெருத்த கரகோஷத்தினிடையே ஸ்ரீமான் நாயக்கர் எழுந்து பேசியதன் முற்பாகத்தை சென்ற இதழில் வெளியிட்டிருந்தோம். அதன் பிற்பாகமாவது:—

பலனடைந்தவர் பார்ப்பனரே.

காங்கிரசின் ஆரம்பமே பார்ப்பனர்கள் எப்படி உத்தியோகம் சம்பாதிக்கலாம் என்கிற கருத்தைக்கொண்டுதான் ஆரம்பிக்கப்பட்டதேயல்லாமல் வேறல்ல, அதுபோலவே காங்கிரஸ் ஏற்பட்டதற்குப் பிறகுதான் உத்தியோகங்களெல்லாம் பார்ப்பனமயமாவதற்கு அநுகூல மேற்பட்டது. மகாத்மா காந்தி காங்கிரசை தலைமைவகித்து நடத்திய காலத்தில் பார்ப்பனர்களுக்கு ஆதிக்கமும் செல்வாக்கும் உத்தியோகமும் குறையத் தலைப்பட்டது. அதனால்தான் இந்தப் பார்ப்பனர்கள் மகாத்மாவை காங்கிரசை விட்டு ஓடும்படி செய்து விட்டார்கள். அதனாலேயேதான் தமிழ்நாட்டில் மகாத்மா காங்கிரசுக்காக உழைத்து வந்த பார்ப்பனரல்லாத பிரமுகர்களையும் காங்கிரசை விட்டு ஓடும்படி செய்து விட்டார்கள். காங்கிரஸ் ஏற்பட்டதின் பலனாய் பார்ப்பனர்கள் லாபமடைந்தார்களே ஒழிய ஏழைகளுக்கும் தொழிலாளர்களுக்கும் குடியானவர்களுக்கும் அதிக கஷ்டம்தான் ஏற்பட்டது.

சீர் திருத்தத்தால் விளைந்த கேடு.

உதாரணமாக காங்கிரசுக்கு முன்பாக 50 கோடி ரூபாய்க்குள்ளாகத்தான் நாம் சர்க்காருக்கு வரிகொடுத்துக்கொண்டுவந்தோம். காங்கிரஸ் பெருக்கப் பெருக்க ஏழைகளுக்கும் வரி பெருகிக்கொண்டே வந்து 50 கோடி ரூபாயிலிருந்த வரி இன்றையதினம் 160 கோடி ரூபாயில் வந்து நிற்கிறது. காங்கிரஸ் பெற்ற பிள்ளைகளான இரண்டு சீர்திருத்தங்களும் தேசத்திற்கு கஷ்டத்தையும் அதிக வரியையும் ஒற்றுமைக் குறைவையும் ஜனங்களுக்கு பந்தோபஸ்து குறைவையும் பார்ப்பன ஆதிக்கத்தையும் ஏற்படுத்தி இருக்கிறதேயல்லாமல் வேறு ஒரு வித நன்மையும் உண்டாக்கவேயில்லை. இன்னும் ஓர் சீர்திருத்தம் வருமேயானால் இனியும் அதிகமான வரியும் கஷ்டமும் பந்தோபஸ்துக் குறைவும்தான் ஏற்படுமேயல்லாமல் அநுகூலம் ஒன்றும் ஏற்படப் போவதில்லை. இப்பொழுதிருக்கும் காங்கிரஸ் பார்ப்பன ஆதிக்கத்திற்காகவேண்டி பொய்யும் புரட்டும் ஏமாற்றமும் நிறைந்து கிடக்கின்றன.

தூக்கு மேடை!

அதில் ஏமாற்றுகிறவர்களுக்கும் வஞ்சிக்கிறவர்களுக்கும் சுயநலக்காரர்களுக்கும்பார்ப்பனர்களுக்கும்தான் இடமிருக்கிறதேயல்லாமல் யோக்கியர்களுக்கு இடமில்லாததோடு ஏழைகளுக்கனுகூலமான திட்டங்களும் அதில் ஒன்றுகூட இல்லை. காங்கிரசின் குற்றங்களை எடுத்து யாராவது வெளியில் சொன்னால் அவர்களை, காங்கிரஸ் துரோகி என்று சொல்லுகிறார்கள். சர்க்காரின் குற்றங்களை யாராவது வெளியில் எடுத்துச் சொன்னால் எப்படி அவன் ராஜத் துரோகியாய் விடுகிறானோ, பார்ப்பனர் குற்றங்களை யாராவது வெளியில் எடுத்துச் சொன்னால் எப்படி அவன் பிராமணத்துவேஷியாய் விடுகிறானோ, சாஸ்திரங்களின் புரட்டுகளை யாராவது வெளியில் எடுத்துச் சொன்னால் எப்படி அவன் மதத்துரோகியாய் விடுகிறானோ, அதுபோலவே நமது பார்ப்பனர்களும் தங்கள் அநுகூலத்திற்காக ஏற்படுத்தி வைத்திருக்கிற காங்கிரஸ் குற்றத்தை யாராவது பேசினால் அவனைக்காங்கிரஸ் துரோகி என்பதோடு மாத்திரமல்லாமல் தேசத்துரோகி என்றும் கூட சொல்லி பிரசாரம் செய்கிறார்கள். இதற்காக வேண்டியே என்னை தூக்கில் இடுவதற்காக நமது பார்ப்பனர்கள் ஒரு கமிட்டி ஏற்படுத்தியிருக்கிறார்கள். எனது நண்பர்கள் ஸ்ரீமான்கள் சக்கரை, ஆரியா இவர்களை தூக்கில் போட்டுவிட்டார்கள். மற்றும் ஸ்ரீமான்கள் கலியாணசுந்தர முதலியார், வரதராஜுலு நாயுடு காரு இவர்களை மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

தலை விரித்தாடும் தற்காலத் தலைவர்கள்.

காங்கிரசைப்பற்றி குற்றம் சொல்லாத மனிதர்கள் யாராவது இருக்கிறார்களா? ஒரு காலத்தில் காங்கிரஸ் தலைவர்களின் பேரில் செருப்பையும் ஜோட்டையும் வீசியெறிந்து விட்டு வெளியில் வந்து விட்ட மகான்களின் படம் இன்றையதினம் உங்கள் வீடுகளிலெல்லாம் தொங்குகிறதா, இல்லையா? காங்கிரசையும் காந்தியையும் குழிதோண்டிப் புதைக்க வேண்டுமென்று சொன்னவர்கள் இன்றையதினம் பெரிய தலைவர்களாக வில்லையா? "மகாத்மாவிற்கு மண்டையில் மூளை இல்லை" என்று சொன்னவர்களும் மகாத்மா சொல்லுவது சட்டத்திற்கு விரோதமென்று சொல்லி அவரைக் கைது செய்யச் சொன்னவர்களும் இன்றையதினம் காங்கிரசுக்கும் சுயராஜ்யக் கட்சிக்கும் தலைவராக இல்லையா? இன்னும் ஸ்ரீமதி பெஸண்ட் அம்மையார் முதற்கொண்டு, மகா மகா கனம் ஸ்ரீனிவாச சாஸ்திரி முதற்கொண்டு ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தி அய்யர், ரங்கசாமி ஐயங்கார்வரையிலும் எத்தனையோபேர் காங்கிரசையும் மகாத்மாவையும் திட்டிக்கொண்டு அதன் கொள்கைகளுக்கு விரோதமாய் எதிர்ப்பிரசாரமும் திருட்டுப் பிரசாரமும் செய்து கொண்டு இருந்தவர்கள் இன்றையதினம் யோக்கியர்களாகி விட வில்லையா? அவர்களுக் கெல்லாம் தூக்குக்கிடையாது; எங்களை மாத்திரம் தூக்கில் போட வேண்டுமாம். காங்கிரஸ் யோக்கியமாயிருந்த காலமாகிய மகாத்மா காங்கிரசில் இருந்த காலத்தில் இப்போதைய காங்கிரஸ் தலைவர்களாகிய இந்தப் பார்ப்பனர்களெல்லாம் அப்பொழுது எங்குபோயிருந்தார்கள்? காங்கிரஸ் யோக்கியப் பெறுப்பற்று விபசாரித்தனமாயிருக்கிற காலத்தில் இப்பொழுது வந்து அதைக்கட்டி அணைந்து கொண்டாடுகிறார்கள். இப்போதைய காங்கிரஸ் தேசத்திற்கனுகூலமாக என்ன திட்டத்தை உடைத்தாயிருக்கிறது? என்ன காரியத்தைக் கொண்டு காங்கிரசை நாம் மதிக்கக் கூடியதாயிருக்கிறது? ஒரு ஸ்தாபனத்திற்கு நாம் மதிப்புக் கொடுப்பதாயிருந்தால் அதனிடத்திலிருக்கிற கொள்கைக்காகவே யல்லாமல் அதனுடைய பெயருக்காகவல்ல. அதுபோலவே மகாத்மா காந்தியை நாம் மதிப்பதும் அவரிடத்தில் பக்தி செலுத்துவதும் அவரிடத்திலுள்ள கொள்கைக்கும் குணத்திற்கும் நடவடிக்கைக்குமே யல்லாமல் அவருடைய பெயருக்கும்சரீரத்துக்கும் வெளி வன அழகுக்குமல்ல. ஆதலால் காங்கிரசின் குற்றத்தை வெளியில் எடுத்துச் சொல்வதினாலேயே ஒருவன் தேசத்துரோகியென்று அழைப்பதென்றால் அப்பேர்ப்

பட்ட தேசத்துரோகத்திற்கு நான் கொஞ்சமும் பயப்படவில்லை.

இராஜகோபாலாச்சாரியாரின் இரகசியம்.

1923-௵த்தில் நடந்த சென்ற சட்ட சபைத்தேர்தலின் போதுகூட நானும் எனது நண்பர்கள் ஸ்ரீமான்கள் எஸ். இராமநாதன், தண்டபாணி பிள்ளை, ஆர். சின்னைய பிள்ளை முதலிய அநேகர் ஒத்துழையாமைக்கு விரோதமாய்ப் புறப்பட்டு டில்லி ஸ்பெஷல் காங்கிரஸ் கட்டளைக்கு விரோதமாக எங்கள் சொந்தத்திலிருந்து ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்துகொண்டு பிரசாரங்கள் செய்தோம். மறுபடியும் என்னையேதான் காங்கிரஸ் கமிட்டிக்குத் தலைவராகவும் ஸ்ரீமான் இராமநாதன் அவர்களை காரியதரிசியாகவும் நியமித்தார்கள். நாங்கள் ஒப்புக்கொள்ள மாட்டோம் என்றுகூட சொன்னோம். ஆனால் ஸ்ரீமான் இராஜகோபாலாச்சாரியார் அவர்கள், இப்பொழுது ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் அஸ்ஸாம் காங்கிரசில் எல்லாம் சரிப்படுத்திவிடுகிறேன் என்று சொல்லி ஏமாற்றி ஆள் சேர்த்துவருவதுபோல், காக்கிநாடாக் காங்கிரசில் எல்லாம் சரிப்படுத்தி விடுகிறேன் என்று சொல்லி எங்களை ஒத்துக்கொள்ளும்படி செய்தார். காக்கிநாடா காங்கிரசில் ஸ்ரீமான் இராஜகோபாலாச்சாரியார் தான் எங்களிடம் சொன்னதற்கு விரோதமாய் சட்ட சபைப் பிரவேசத்தை ஆதரித்துத் தீர்மானத்தை பிரேரேபித்தார். அது முதற்கொண்டே எங்களுக்கும் அவருக்குமிருந்த கட்டுப்பாடும் நம்பிக்கையும் குலைந்து போய்விட்டது. அதிலிருந்துதான் ஸ்ரீமான் இராஜகோபாலாச்சாரியார் பார்ப்பனர்களுக்கு அனுகூலமாகவும், நாங்கள் பார்ப்பனரல்லாதாருக்கு அனுகூலமாகவும் இருந்துவருகிறோம். ஆனால் அவர் இரகசியமாகவும் தந்திரமாகவும் செய்கிறார்; நாங்கள் வெளிப்படையாகவும் தைரியமாகவும் செய்கிறோம். கள்ளை நிறுத்துவது என்கிற பெயரை வைத்துக்கொண்டு பார்ப்பனர்களுக்கு ஓட்டுவாங்கிக் கொடுப்பதற்காக ஸ்ரீமான் இராஜகோபாலாச்சாரியார் ஒரு இயக்கம் என்று ஆரம்பித்துக் கொண்டு ஊர் ஊராய்ப் பிரசாரம் செய்தார். அதன் பலனாகத்தான் ஸ்ரீமான் வெங்கிட்டரமண அய்யங்காருக்கு ஓட்டுவாங்கிக் கொடுப்பதற்காக சில கிராமங்களுக்குச் சென்று பிரசாரமும் செய்தார். அதனால்தான் ஸ்ரீமான் வெங்கட்டரமண அய்யங்காரின் உண்மை நிலையைப்பற்றி நானும் எனது பத்திரிகையின் மூலம் பிரசாரம் செய்தேன். ஸ்ரீமான் இராஜகோபாலாச்சாரியார் சுயராஜ்யக் கட்சிக்காரர் கள்ளை நிறுத்துவதாக ஒப்புக்கொண்டார்கள், ஆதலால் அவர்களுக்கு ஓட்டுக் கொடுங்கள் என்கிறார்; ஆனால் சுயராஜ்யக் கட்சிக்காரர்களோ, ஒருவர் சட்டசபையில் கள்ளை நிறுத்த முடியாது என்கிறார்; மற்றொருவர் முட்டுக் கட்டை போடுவோமென்கிறார்; வேறொருவர் முட்டுக் கட்டை போடமுடியாது அரசாங்கத்தைத் திணரச் செய்யலாமென்கிறார்; பிறிதொருவர் அரசாங்கத்தை அசைக்க முடியாது, இதன் மூலம் ஜனங்களுக்கு ஒரு படிப்பினை உண்டாக்கலாமென்கிறார்; இன்னொருவர் படிப்பு ஒன்றும் உண்டாக்க முடியாது; இரட்டை ஆட்சியை ஒழிக்கலாமென்கிறார்; மற்றொருவர் இரட்டை ஆட்சியை ஒழிப்பதில் ஒரு காரியமும் முடிந்து விடாது, சர்க்கார் சொல்லுகிறபடி கேட்கிற ஆள்கள் போய் உட்காருவதைவிட தேசியவாதியாகிய நாம் போய் உட்காருவது நல்லதல்லவா என்கிறார்; வேறொருவர் தேசிய வாதியானாலும் சரி, யாரானாலும் சரி எப்படியாவது ஜஸ்டிஸ் கட்சியை ஒழிப்பதற்காகப் போக வேண்டுமென்கிறார்.

சென்னையைக் கல்கத்தா வாக்க முயலுகிறார்களா?

வெளியில் இப்படி பலவித அபிப்பிராய பேதங்களிருப்பதாகக் காட்டிக்கொண்டாலும் உள் அந்தரங்கத்தில் இவர்கள் எல்லோருக்கும் ஒரே அபிப்பிராயந்தான். அதென்னவென்றால் எப்படியாவது பார்ப்பனரல்லாதாருக்கு இது சமயம் கொஞ்ச நஞ்சமிருந்து வரும் செல்வாக்கையும் அதிகாரங்களையும் உத்தியோகங்களையும் ஒழித்து அந்த ஸ்தானங்களையும் பார்ப்பனர்களே கைப்பற்ற வேண்டுமென்பதுதான். இந்த மாதிரி கெட்ட எண்ணங்கள் என்றைக்கிருந்தாலும் ஒரு நாளைக்கு நமது பார்ப்பனர்களுக்கு ஆபத்தாய்த்தான் முடியப் போகிறது. உதாரணமாக கல்கத்தாவில் இரட்டையாட்சியை ஒழித்ததின் பலன்தான் அங்கு இந்து முஸ்லீம் கலகமென்னும் நெருப்புப் பற்றி எறிந்து கொண்டிருக்கிறது. கல்கத்தா இரட்டை ஆட்சியை ஒழிக்கவேண்டுமென்ற எண்ணமே அங்குள்ள மகமதிய மந்திரிகளை ஒழிப்பதற்காக செய்த சூழ்ச்சிகளேயாகும். மந்திரிகளை ஒழித்து வெற்றி பெற்றதன் பலன இந்து முஸ்லீம் கலகமாய்ப் போய் விட்டது. அதுபோலவே சென்னையிலும் பார்ப்பனரல்லாத மந்திரிகளை ஒழிக்க நமது பார்ப்பனர்கள் காங்கிரஸ் பெயராலும் தேசத்தின் பெயராலும் செய்யும் சூழ்ச்சிகள் நிறைவேறுமானால் என்ன நடக்குமென்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். சென்ற வருடம் சுயராஜ்யக் கட்சிப் பார்ப்பனர்கள் செய்த சூழ்ச்சி வெற்றியடைந்ததினால் இவ்வருடம் அத்தேர்தல்களில் என்ன நடக்கிறதென்பதைக் கவனித்தால் நடக்கப் போவது நன்றாய் விளங்கும். சென்ற வருடத்திய பஜனை எங்கே? கொடிகள் எங்கே? மகாத்மாவின் படமெங்கே? தேங்காய் பழம் பூஜையெங்கே? இவர்களுக்காகப் பிரசாரம் செய்த ஸ்ரீமான்கள் சக்கரைச்செட்டியார் டாக்டர் வரதராஜுலு நாயுடு, கல்யாணசுந்தர முதலியார் முதலிய பெரியார்களெங்கே? வீதி வீதிக்கு கூட்டமெங்கே? சோம்பேறிப்பையன்களுக்குக் காசு கொடுத்து பார்ப்பனரல்லாத பெரியார்களை திட்டச் சொன்னதும் அடிக்கச் சொன்னதுமான தைரியமெங்கே? ஒரு சிறு புரட்டு வெளியானதெங்கே? இவ்வளவு பலன்கள் காரியங்கள் மறைபட்டிருந்தால் இனிபெரும் புரட்டு வெளியாய் விட்டால் இந்தப் பார்ப்பனர்களின் கதி என்ன ஆகுமென்று நினைக்கிறீர்கள்! வங்காளத்தைவிட எண் மடங்கு அதிகமாகுமா இல்லையா? அப்புறம் யாரால் இக்கலகங்களை அடக்க முடியும். அரசாங்கத்தாரும் நன்றாய் வேடிக்கை பார்த்துக்கொண்டு சிறிப்பார்களேயொழிய ஒரு கட்சிக்கும் சிபார்சுக்கு வரமாட்டார்கள். பின்னால் கையில் பலத்தவன் காரியமாய்த் தான் போய் விடும். பிராமணர்களே மந்திரியாயும் போலீஸ் அதிகாரியாகவும் வந்தாலும் கூட பார்ப்பனரல்லாதார்கள் தான் போலீஸ்காரர்களாகவும் பட்டாளத்து சிப்பாய்களாகவும் இருப்பார்கள். அது சமயம் மகாத்மா காந்தி வந்தாலும் 4-நாள் பட்டினி இருக்கத்தான் முடியுமே தவிர வேறு ஒரு காரியமும் செய்துவிட முடியாது. ஆதலால் இப்பொழுதிருக்கிற ஏதோ சில விஷமக்கார பார்ப்பனர்கள் தாங்கள் வெகு புத்திசாலிகளென்றும் தந்திரசாலிகளென்றும் நினைத்துக் கொண்டு செய்வதின் பலன் நாளையதினம் ஒரு பாவமும் அறியாத இவர்களின் குழந்தை குட்டிகளுக்கும் மாணவர்களுக்கும் மற்றும் உள்ளவர்களுக்கும் கஷ்டத்தை விளைவிக்குமென்று வருத்தப்படாமலிருக்க முடியவில்லை. ஆதலால் பார்ப்பனர்களில் வாலிபர்களாகவும் பட்சபாதமற்றவர்களாகவும் பரிசுத்தர்களாகவும் இருக்கிறவர்கள் தேச நன்மையையும் தங்களது சமூக நன்மையையும் உத்தேசித்து ஒன்று சேர்ந்து தங்கள் சமூகத்திற்கு நன்மை செய்ய வேண்டுமென்ற எண்ணம் வைத்துக் கொண்டு தேசத்தின் பெயரால் சாது ஜனங்களுக்குச் செய்யும் கொடுமையைத் தடை செய்து கர்மபலனை அடையாமலிருக்கும்படி பிரயத்தனப்பட வேண்டியது அவர்களது கடமையாகும்.

பார்ப்பனர்கள் கடமை.

இவ்விஷயங்களைப் பற்றி எடுத்து நான் சொல்லுவதை நீங்கள் அலட்சியமாய் கருதிவிடக்கூடாது. என்னைப்பொருத்தவரையிலும் நான் உண்மையாய் உணர்வதையும் எனக்கு உண்மை என்று பட்டதையுமே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். பார்ப்பனர்களை உதைத்து விடமுடியுமென்றாவது இந்நாட்டைவிட்டு ஓட்டிவிட முடியுமென்றாவது நான் ஒருகாலமும் நினைக்கவே இல்லை. எப்படியானாலும் மகமதியர் கிருஸ்தவ சகோதரர்களைப் போலவே அவர்களும் இந்த நாட்டிலேயே இருக்க வேண்டியதுதான். ஆனால் அவர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரர்களாகவும் தேச நன்மைக் குற்றவர்களாகவும் நடந்து கொள்ள வேண்டும். தேசத்தில் அவர்களிடத்தில் யாருக்கும் நம்பிக்கையில்லை.

சுயராஜ்யமா? சுயமரியாதையா?

இக்காலத்தில் நானும் இந்தப் பார்ப்பனர்களை நம்பி அவர்கள் பின்னால் திரிந்து கொண்டு ஜஸ்டிஸ் கட்சியார் உத்தியோக வேட்டைக்காரர்கள் என்று சொன்னதுண்டு. ஜஸ்டிஸ் கட்சிக்கு எதிரிடையாக வேலை செய்த காலமுமுண்டு. அப்படியிருக்க அவர்களைப்பற்றி நான் ஏன் இப்பொழுது குறை கூறுகிறேன். அவர்களால் எனக்கு ஒரு கெடுதியும் ஏற்பட்டு விடவில்லை. ஆனால் அவர்களுடைய அந்தரங்கத்தைக் கூடவேயிருந்து பார்த்ததில் அவர்களைவிட ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் ஆயிரம் மடங்கு யோக்கியர்களென்பதே எனது அபிப்பிரா

(இதன் தொடர்ச்சி 13-பக்கம் பார்க்க)

தானத்திற்குச் சற்பாத்திரம் யார்?

(கைவல்யஸ்வாமியார் எழுதுகிறார்)

(சென்ற இதழ் தொடர்ச்சி).

வேதம் வாசித்து தபசு பூரணப்பட்டு, ஒழுக்கம் நிறைந்து, ஞானேந்திரியம் கருமேந்திரியங்களையுமடக்கின உத்தமமான பிராமணனுக்குத் தானம் கொடுப்பதைவிட தன் சுற்றத்தார் தன் தங்கை தமக்கை தன்பெண் இவர்களுக்குக் கொடுப்பது கோடிப்பங்கு புண்ணியம் என்று தானம் செய்தால் புண்ணிய முண்டென்று, எந்த ஸ்மிருதி சொல்லிற்றோ அந்த பராசர ஸ்மிருதியே, விதித்திருப்பதைத் தெரிந்தோம். பிராமணனுக்கே தான தருமம் செய்வது வழக்கத்தில் ஏன் இருக்கிறது என்பதை நாம் முதலில் தெரியவேண்டும். பிராமணன் என்பது ஜாதியல்ல; அறிவிலும் தபசிலும் ஒழுக்கத்திலும் சிறந்து உலக உபகார நிமித்தம் உலக சேவை செய்து வந்தவர்களே பிராமணர்கள். வேடர், புலையர், செம்படவர், தாசி, பணிப்பெண் முதலிய ஜாதியிலிருந்து உற்பவித்தவர்களும், மேற்கண்ட நெறியுடையாராயின் அவர்களும் பிராமணர்களாகவே மதிக்கப்பட்டிருந்தார்கள். இதனால்தான் பிரமஞான முடையோனை பிராமணன் என்கிறோம். இங்கு ஜாதி உண்டா? இல்லவே இல்லை. நீதியை சரியாய் நடத்தும் க்ஷத்திரியனுக்கும் எல்லவருக்கும் சமமான பிராமணனுக்கும் ஜாதியில்லை என்னும் பிரமாணத்தின் கருத்தும் இதுவேயாகும். இவர்களில் மேலான தபசையடைந்து கடவுளைத் தெரிந்தவர்கள் ரிஷிகள் எனப்பட்டார்கள். அவர்கள் எழுதிவைத்த அநேக உண்மைகளே இப்பொழுது வேதமெனப்படுவது. அவர்கள் எழுதினதில் யாதொரு பாரபக்ஷமும் வித்தியாசமுமில்லை. அதில் கண்ட சமதிருஷ்டி உள்ள பிராமணனையாரும் தூஷிக்கமாட்டார்கள்; தூஷிக்கவும் முடியாது. ராஜநீதியை விட்ட ராஜாவையும் அவரின் சிப்பந்தியையும் குடிகள் கண்டிக்காமலிருக்க முடியுமா? பிராமணன் என்கிற யோக்கியதை கொஞ்சங்கூட இல்லாமல் கடவுளின் பேராலோ, இப்பொழுது எழுதிக்கொண்ட சாஸ்திரத்தின் புரட்டாலோ ஜனங்களைத் தாழ்த்தி ஏமாற்றிப் பிழைக்கும் பார்ப்பானைக் கண்டிக்காமலிருக்க முடியுமா?.

முன் சொன்ன தபசை உடைய பிராமணனுக்கு உலக உபகார நிமித்தம் உலக சேவையே தொழில். அந்தப் பிராமணனுக்குத் தேகம் கொழுத்துப் போகாமல் உத்தம தொழிலுக்கு தேகம் நிலைநிற்கும்படியான சத்துவ குணப்பொசிப்பும், மழை, வெயில், பனி, இவைகளினின்று தேகத்தைக் காப்பாற்றிக் கொள்ள பாதரக்ஷை, குடை, விசிறி, வஸ்திரம் முதலிய தானங்கள் செய்தால் புண்ணிய முண்டென்று சாஸ்திரங்களில் சொல்லப்பட்டன. அதன் பிரகாரம் அவர்களும் திருப்தியோடு வாங்கி உண்டு உடுத்தி தேகத்தைப் பற்றியும் மனதைப் பற்றியும் உலகத்தைப் பற்றியும் வானத்தைப்பற்றியும் அநேக ஆராய்ச்சி செய்து அநேக ஏடுகள் எழுதிவைத்தார்கள். மனித புத்தி எவ்வளவு தூரம் எட்டுமோ அதைவிட மேலேயே அவர்கள் ஆராய்ச்சிகள் சென்றிருந்தன. அப்பொழுது இந்த பரத கண்டம் பூராவும் இவர்கள் யாத்திரை செய்ய அவசியமும் ஏற்பட்டிருந்தது. இவர்கள் தபசு செய்ய வசதியும் ஆராய்ச்சி செய்ய சௌகரியமும் இருந்த இடங்களையெல்லாம் புண்ணிய ஸ்தலங்களென வருணித்தார்கள். அந்த காலம் முதற் கொண்டு பிரபுக்கள் ஆங்காங்கு சத்திரம் கட்டி, வந்த பிராமணர்களுக்கு எல்லாம் சாப்பாடு போடும்படி ஏற்பாடு செய்யப்பட்டது. இவர்களுக்கு வேண்டியதை தானமாகவும் கொடுத்து வந்தார்கள். இவர்களுக்கு சுகமும் சௌகர்யமும் அதிகரிக்க அதிகரிக்க தபசும் ஒழுக்கமும் கெட்டு புத்திரனுக்காக விவாகம் செய்து கொள்ளவேண்டும், அவனும் சற்புத்திரனாய் ஒருவனாயிருக்க வேண்டும் என்ற எண்ணத்தை மறந்து காம துரந்தரர்களாகி அநேக பெண்களை விவாகம் செய்ததாலும் விபசாரம் செய்ததாலும் கூட்டம் பெருகிற்று. பாரமார்த்திகத்திலும், சத்தியத்திலும், உலக நன்மையிலும் இருந்த மனம் விஷய சுகங்களுக்கு ஆசைப்பட்டு உலகத்தைக் கௌவிக்கொண்டது. இந்த இடந்தான் பார்ப்பான் புரட்டும் வஞ்சனையும் ஆரம்பித்த இடம். தபசும் ஒழுக்கமும் கெட்டு, ரிஷிகள் சொன்ன வேதத்தின் கருத்தை மறந்தும் மறைத்தும், தங்களையும் தங்கள் கூட்டத்தாரையும் பழைய பிராமணனென மற்றவர்கள் நினைத்து வேண்டிய சௌகர்யங்களைச் செய்து கொடுத்துக் கொண்டேயிருக்க சாஸ்திரமென்றும், ஸ்மிருதியென்றும் 5-வது வேதமென்றும், அநேக புராணமென்றும் பேர், ஊர் இல்லாத சுலோகங்களும் அநேகமாக எழுதிவிட்டார்கள். அந்தக் காலத்தில தான் எட்டு விதக் கல்யாணம், பிராமணன் அநேக பெண்களைக் கல்யாணம் செய்யலாம், நாலு வர்ணத்திலும் கல்யாணம் செய்யலாம், பிராமணன் விபசாரம் செய்தால் ராஜா அவனுடைய சொத்துக்களோடு அவனை வேறு நல்ல இடத்துக்கு அனுப்பி விட வேண்டியது, ஒருவனுக்கு 12 விதமான புத்திரர்கள், என்னும் இம்மாதிரியான விஷயங்களெல்லாம் எழுதப்பட்டன. இவைகளை அனுசரித்து அநேக கதைகளை உண்டு பண்ணி ஜனங்களை ஏமாற்றித் திகைக்கச் செய்து சமயத்துக்குத் தகுந்தபடி எதுகை மோனைகளைச் சேர்த்துச் சொல்லி குருட்டு நம்பிக்கையில் ஆழ்த்தினார்கள். ஆழ்த்துகின்றார்கள்.

ரிஷிகள் இருந்த மலைச்சாரல் நதிக்கரைகளில் அநேக சிஷ்யர்கள் வித்தை கற்றுக் கொண்டு வந்தார்கள் அதற்குத்தான் குருகுலம் என்று பெயர் அவர்களுக்கு வேண்டிய சாமக்கிரிகைகளை அவ்விடமே கொண்டுபோய் கொடுக்கவேண்டியிருந்தது. அங்கு கொண்டுபோய் கொடுப்பது விசேஷப் புண்ணியமாகக் கருதப்பட்டது. அந்த வழக்கத்தை ஒட்டியே இப்பொழுது புண்ணிய நதி புண்ணிய க்ஷேத்திரம் முதலிய இடங்களில் தானதருமங்கள் செய்வது விசேஷமென்று செய்து வருகின்றோம். அந்த ரிஷிகளிருந்த புண்ணிய பூமியில் மனிதனை அரித்துத் தின்னும் பிசாசுகளும், பொய்யும் புரட்டும் நிறைந்த வஞ்சகர்களும், கொடுமை செய்யும் சண்டாளர்களும், பேராசைப் பிடித்த பேர்களும் நிறைந்த விபசாரக் காடாயிருக்கிறது. இவர்களைக் கண்டிப்பது பிராமணர்களைத் தூஷிப்பதாகுமா? இதைத் தைரியமாக எடுத்துச் சொல்லும் "குடி அரசு"க்கு ஒரு நமஸ்காரம் செய்து விட்டு மேற்செல்லுவோம்.

பசுதானம் முக்கியமெனக் கருதி புண்ணிய ஸ்தலத்திலும் விசேஷ சந்தர்ப்பங்களிலும் பெரிய புண்ணியமென்றும் கடமையென்றும் செய்துவருகின்றோம். சற்புத்ரன் உலகத்துக்கு உபகாரமாய் வருவான். அவன் போஷணையின் நிமித்தம் அவனைப் பெற்ற தந்தைக்கும் குருகுலத்தில் வித்தை போதிக்கும் குருவிற்கும் தபசால் மேலிருந்த பிராமணனுக்கும் பசுவை தானமாகக் கொடு என்று சாஸ்திரம் சொல்லுகிறது. அப்படிச் செய்ய சந்தர்ப்பமுமில்லை, ஆட்களுமில்லை. நாம் செய்யும் பசுதானமெல்லாம் முட்டாள் தனமும் அறிவில்லாமையும் அர்த்தமில்லாமலுமிருக்கிறதே யொழிய யுக்தி புத்திக்கு ஒத்ததாயில்லை. எப்படி என்றால் ராமேஸ்வரம் போகின்றோம், அங்கு இரண்டணாவிலிருந்து அநேக ரூபாய் வரையிலும் பசுதானத்துக்கு வாங்கப்படுகிறது. எட்டணாவோ, ஒரு ரூபாயோ கூலி கொடுத்து ஒரு ஆடும் ஒரு மாடும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆளுக்குத் தகுந்தபடி தலாலி (தரகன்) மத்தியஸ்தம் முதலியவைகளால் பணத்தை வாங்கிக்கொண்டு வாலை உருவச் செய்து யாத்திரைக்குப் போதுமான பணத்தைக் கொண்டுவராத மடையர்களே, பாவிகளே, என 2-திட்டுகள் திட்டி அனுப்பிவிடுகிறார்கள். பெரிய பணக்காரர்களாயிருந்தால் அவர்களுக்கு வால் வழியாக புண்ணியம் கைகூடாது. முழு மாடு ஒன்றோ இரண்டோ பத்தோ வாங்கிக் கொடுக்கவேண்டும். அதற்காக சில மாடுகள் தயாராயிருக்கிறது. ஐம்பதோ, நூறோ, விலை பேசி முடிக்கத் தலாலி தயாராயிருக்கிறான். அந்த மாட்டை வாலை உருவி தானம் செய்ய குருட்டு நம்பிக்கையில் ஆழ்ந்த பணக்காரன் இருக்கிறான். மாட்டுக்காரன் வாங்கின பணத்தில் இரண்டோ, நாலோ மாட்டுக்காரனுக்குக் கொடுத்துவிட்டு மீதி பணத்தைத் திருப்பி வாங்கி மாட்டையுடையவனிடமே கொடுத்துவிடப் பார்ப்பானுமிருக்கிறான். ஆனால் புண்ணியத்தைக் கொடுக்க மாத்திரம் ஆளில்லை. வந்த பணக்காரனுக்கு இன்னொரு பணக்காரனைச் கட்டிக்காட்டி அவன் அப்படிச் செய்தான், இவன் இப்படிச் செய்தான், இந்த இடத்தில்தான் பணத்தைச் செலவுசெய்யவேண்டும், நீ என்ன கருமியா? புண்ணியவான்கள் பணம் புண்ணியத்துக்குத்தான் போகும். பணம் இல்லாவிட்டால் நான் கடன் தாரேன், வாயில் இவ்வளவு தருவதாகச் சொன்னால் போதும், பின் ஊர் வந்து வாங்கிக் கொள்ளுகிறேன், என்று ஏமாற்றி நம்மை முட்டாள்களாக மதித்து திட்டாமல் திட்டி அனுப்பிவிடுகிறார்கள். இந்தப் பசுதானம் எதாவது லாபமோ புண்ணியமோ தருமா? கொஞ்சம் ஆலோசித்துப் பாருங்கள். இந்த உலகத்தில் பசுதானம் கொடுத்தால் மேலுலகத்தில் ஒரு ஆறு இருப்பதாகவோ, அங்கு

அந்தப் பசு வந்து கரை ஏற்றும் என்றும் நம்பும்படியாகச் சொல்லி வைத்திருக்கிறார்களே; இதை நம்பும் நம் புத்தி எப்படியிருக்கிறது, என்று ஆலோசித்துப் பாருங்கள். இனி தருமத்தைப்பற்றி கவனிப்போம். ஸ்மிருதியில் 32 வித தருமம் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் அன்னதானம் விசேஷம். உலகசேவை செய்து கொண்டும்வரும் பிராமணனுக்கு சாப்பாடு போடும்படியாய் சாஸ்திரம் சொல்லப்பட்டது; அவசியமும் ஏற்பட்டது. நாம் கொடுக்காவிட்டால் அவர்களுக்கு வழியுமில்லை, வேறு யாதொரு தொழிலும் அவர்களுக்கில்லை. ஆனால் இப்பொழுது தற்காலம் பிராமணர் என்று பெயர் வைத்துக் கொண்டிருப்பவன் தோட்டி முதல் தொண்டமான் வரை உள்ள தொழில்களை தனக்கே சொந்தமாக்கிக் கொண்டு பிறரை வஞ்சிப்பதிலேயே நாட்டம் கொண்டு சகலவிதமான சுகபோகங்களையும் அநுபவித்துக் கொண்டிருக்கிறான். சத்துவ குண உணவையே பிராமணன் உண்ண வேண்டும், அதையே நாம் கொடுக்க வேண்டுமென்று சாஸ்திரம் சொல்லி உளுந்து, கடலை, மொச்சை, சர்க்கரை, வெங்காயம், வெள்ளைப் பூண்டு, வெண்டைக்காய், முருங்கக்காய், பூசனிக்காய், நெய், தயிர் முதலியவைகள் பிராமணன் உண்ணக்கூடாது என்று நீக்கப்பட்டிருக்கின்றன. இப்போது நாம் செய்யும் பிராமண போஜனத்திலோ வெங்காயச் சாம்பார், பூசனிக்காய் மசால், மோர்க்குழம்பு, நாலுவிதக் கறி, இரண்டு விதப் பச்சடி, ஒரு கிச்சடி, நாலுவிதப் பொடித்துவல் நாலுவித வறுவல், லாடு, ஜிலேபி, வடை, ஒப்பிட்டு, ஒருவகைப் பிண்டி, பாயாசம், மூன்றுவிதப் பிரதமம், ஒரு பால் பாயாசம், இவையெல்லாம் உள்ளுக்குப் போக சிறு எலுமிச்சை, பெரு எலுமிச்சை, மாங்காய், இஞ்சி முதலிய ஊறுகாய் தினுசுகள், இவ்வளவும் தின்றுவிட்டு ஒரு டம்ளரையும் விசிறியையும் திருடி ஒரு வீட்டுத் திண்ணையில் படுத்துப் புரண்டுகொண்டு சமாராதனை செய்தவனையும் "இவன் என்ன பெரிய சமாராதனை செய்துவிட்டான் கிருபாசிகாமணி. பாயசத்திற்கு குங்குமப்பூ சரியாய்ப் போடவில்லை" என்று பலவார்த்தையால் நம்மையே குற்றஞ் சொல்லிக் கொண்டு திரிவதைப்பார்க்காதவர்கள் யார்? தித்திப்பு திகட்டாமல் இருக்க புளிப்பையும் காரத்தையும் உள்ளுக்குள் திணித்து அஜீரணமாக இஞ்சி, பெருங்காயம், கருவேப்பிலை, வேப்பம்பூ இவைகளால் இடித்து மெருகாக்கின வெப்பங்கட்டி என்னும் ஜீரண பதார்த்தத்தை உள்ளே செலுத்தி, இரண்டு வயிராய் இருப்பை பெருத்து ஒரு அடி கொழுப்புங் கட்டி நம்மைக் குற்றமாகவே பேசித் திரியும் இவர்கள் தானா தானத்திற்கு சற்பாத்திரமாவார்கள்? கூலியால் தனக்கு வரும் வரவாய்ச் சாப்பாட்டுக்குப் போதாமல் மறுநாள் கூலிக்குப் போகும்போது அரை வயிறு குடித்து அல்லை ஒட்டி கண் குழிந்து கூலிக்குப்போகும் ஏழை சற்பாத்திரமாக மாட்டானா? பிராமண போஜனம் செய்விப்பவர்கள் தங்களுக்கு ஆபத்து சம்பவிக்குங் காலங்களில் உதவும் ஏழை மக்களை சற்பாத்திரங்களாக ஏன் கருதுகிறதில்லை? இதை அறிந்தே நமது நாயனார் "வறியார்க் கொன்றீவதே ஈகை"

[11-ம் பக்கத் தொடர்ச்சி.]

பின்னால் பச்சாதாபப் படுவார்கள். ஏனெனில், நான் ஒவ்வோரிடத்திலும் துராசாரமே பார்த்துக் கொண்டு வருகிறேன். விதவைகளைப்பாலத்காரமாய் தடுத்து விதவைத் தன்மையை அனுஷ்டிக்கச் செய்வதால் விதவைகளுக்காவது, குடும்பத்திற்காவது அல்லது விதவா தர்மத்திற்காவது மேன்மை உண்டாகவே மாட்டாது. இம்மூன்று தத்துவங்களும நசித்து வருவதை என் கண்களினாலேயே பார்த்துக்கொண்டிருக்கிறேன். பால்ய விதவைகளே! நீங்களும், உங்களைப் பல வந்தப்படுத்தி விதவைகளாக வைத்திருக்கும் ஸ்திரீ புருஷவர்க்கங்களும் இதை அறியுமாக" இவ்வாறாக,

1921-ம் வருடத்திய ஜனசங்கியைப்படி ஹிந்து கைம் பெண்களின் தொகையினை நோக்குகையில், ஐயகோ! என் நெஞ்சம் துடிக்கிறது!

1 வயதுள்ள விதவைகள்			597
1 முதல் 2 ,,		,,	494
2 ,,	3 ,,	,,	1,257
3 ,,	4 ,,	,,	2,837
4 ,,	5 ,,	,,	6,707
ஆக மொத்தம்.			11,892
5 ,,	10 ,,	,,	85,037
10 ,,	15 ,,	,,	232,147
15 ,,	20 ,,	,,	396,172
20 ,,	25 ,,	,,	742,820
25 ,,	30 ,,	,,	1163,720
ஆக மொத்த விதவைகள்			2631,783

அல்லாமலும் இத்தகைய விதவைத் தன்மையானது பிரஜா உற்பத்திக்கு பேரிடராயிருக்கிறது. நமது ஹிந்து மதத்திலிருந்து எவரேனும் இரண்டொருவரை பிற மதத்திற்கு மாற்றப்பட்டால் நம் மக்களுக்கு எவ்வளவோ துன்பம் நேரிட்டுவிட்டதாகக் கருதி பரிதாபப்படுகிறார்கள். இதன் காரணம் நமது மதத்தினரில் இருவர் குறைந்து விட்டதால் ஹிந்து சமூகத்திற்கு கஷ்டமும் நஷ்டம் ஏற்பட்டு விட்டது என்பதினாலேயன்றோ? அங்ஙனம் இரண்டு நபருக்கு இவ்வளவு துக்கமும் [illegible]மும் ஏற்படுமானால் தற்காலம் நம [illegible] நாட்டிலுள்ள இருபத்தாறு லட்சத்து முப்பத்தோராயிரத்து எழுநூற்று எண்பத்திமூன்று விதவைகளும் கலியாணம் செய்துகொண்டு இல்லற வாழ்க்கை நடத்துவார்களானால் எத்தனை குழந்தைகள் பெறக்கூடும். சராசரி மொத்தத்தில்

மூன்றில் இருமடங்குப் பெண்கள் 2-வருடத்திற்கு ஒரு குழந்தை வீதம் பெறுவதாக வைத்துக்கொண்டாலும் தடவை ஒன்றுக்கு 8,77,26 குழந்தைகள் வீதம் வருடம் ஒன்றுக்கு 4,38,631 பிரஜா உற்பத்தியை நாம் கெடுத்துக்கொண்டுவருகிறோம். இது, இரண்டொருவர் மதமாறுவதால் நஷ்டம் வந்துவிட்டதாகக் கருதுவோருக்குப் புலப்படுவதில்லை. பால்மணமறாத 5-வயதிற்குட்பட்ட இளங் குழந்தைகள் மட்டிலும் 11,892 பேர் இருக்கிறார்களென்பதையும் தன் பிறவிப்பயனையே நாடுதற்கில்லாது, இன்பந்துய்த்தற்கில்லாது, அடக்கி வைக்கப்பட்டிருக்கும 15-வயதிற்குட்பட்ட கைம்பெண்கள் 2,32,147-பேர் இருக்கிறார்களென்பதையும் கேட்கவே என் குலை நடுங்கிறது. இத்தகை படுமோசமான விதவைத்தன்மையை எந்த நகரீக உலகம் ஏற்கும்?

விதவைகளின் கொடுமையை நீக்க ஒரு நூறு வருடங்களாக இராஜாராம் மோகன ராய், ஈஸ்வரசந்திர வித்யாசாகரர் கோலாப்பூர் மகாராஜா, சுரேந்திரநாத் பானர்ஜி முதலிய அறிஞர்கள் பாடுபட்டுழைத்தனர். இது போழ்தும் இத்தகைய சீர்திருத்தத் துறையில் பாஞ்சாலத் தலைவர்கள் பலர் இறங்கி உழைத்து வருகின்றனர்.

நமது நண்பர் திருசிரபுரம் திரு. சி. பி. இராஜகோபால நாயுடுகார் விதவைகளை ரக்ஷிப்பது என்னும் பரோபகாரத் துறையில் இறங்கி, 'ஆசாரம்' 'வழக்கம்' என்று உளறும வைதிகப் பைசாசங்களின் பலமான எதிர்ப்புகிடையே, நுணுகிய ஆராய்ச்சியுடனும் அநுபவத்துடனும் "விதவாவிவாக விளக்கம்" என்னும் புத்தகத்தை எழுதியிருக்கிறார். இதில் நம் நாட்டு மக்களுக்கு இருக்கும் கஷ்டமும் கொடுமையும், அவர்களால் ஒவ்வொரு குடும்பத்திற்கு ஏற்படும் அபகீர்த்தியையும், விதவைத் தன்மையைக் காப்பாற்றும் பொருட்டு பெரிய பெரிய இழிச் சொல்லையும் சகித்துக் கொண்டிருக்கும் சாதனையும், விதவைத் தன்மையைக் காப்பாற்றும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இவ்வித அபகீர்த்தி நேருகிறபடியால் இது உலக வழக்கம் என்று சமாதானப் படுத்திக் கொள்ளும் தன்மையும் எவ்வளவு தைரியமாயும் தெளிவாயும் அநுபவமாயும் தெரிவிக்கக்கூடுமோ அதற்கு மேலாகவே அனைவரும் சரி என்று ஒப்புக்கொள்ளத்தக்க வண்ணம் விவரித்து எழுதியிருக்கிறார். இப்புத்தகத்தை வாசிப்பவர்கள் எவ்வளவுதான் 'ஆசாரம்' 'பழக்கம்' 'வழக்கம்' என்னும் மூட நம்பிக்கையில் ஈடுபட்ட கல் நெஞ்சர்களாயிருந்தாலும் அவர்கள்மனதை இளக்கி விதவைகள்பால் கருணை காட்டும்படி செய்துவிடுமாதலால், புத்தகம் சிறியதாயிருப்பினும் உலகிற்குப் பயன் படக்கூடிய வகையிலிருப்பதால் இதை பெரிய நூல் என்றே கூறவேண்டும். இப் புத்தகத்தால் திரு. நாயுடுகார் நம் நாட்டிற்குப் பெருந்தொண்டு செய்தவராகிறார். இதுபற்றி திரு. நாயுடுகார் அவர்களுக்கு நமது நாடும், ஹிந்து மதமும் பெண்டிருலகமும் நன்றி செலுத்தப் பெரிதும் கடமைப் பட்டுள்ளது.

ஈ. வெ. இராமசாமி.

என ஒரே வாக்கியத்தில் அடக்கிவிட்டார். இரண்டு வேளை சாப்பிட்டு யாதொரு பிரயோஜனமில்லாமல் நம்மைத் தாழ்த்துகிறார்கள் ஒரு கூட்டத்தார். அரை வயிறு சாப்பாடும் போதாமல் கூலிவேலை செய்பவும் சக்தியற்று மாளுகிறார் மற்றொரு கூட்டத்தார் இதற்கு [illegible] இல்லாதவர்கள் சொர்க்கத்துக்கு [illegible]கிறார்களாம். இந் நிலையில் சுயராஜ்யம் [illegible]? இதன் மற்ற பாகங்களை அடுத்த முறை எழுதுவோம்.

தேவஸ்தானச் சட்டம்.

பார்ப்பனக் கட்சியின் சூழ்ச்சி பொடி பொடியாப் தகர்க்கப்படுகிறது.

பிரபல தேச பக்தர்களின் கருத்து.

சட்ட சபையில் வரப்போகும் திருத்தத்தை சுயராஜ்யக் கட்சியார் எதிர்ப்பது
"தீமைக்குத் துணை போவதாகும்," "கூடா வொழுக்கமாகும்"
"புரட்டான போலிச் செயலாகும்." "காங்கிரசுக்கு அழிவு தேடுவதாகும்"

திரு. நாயுடுவின் எச்சரிக்கை.

விசேஷக் கமிட்டியின் அனுமதியைப் பெறாமல் சட்ட சபைக்குள் நுழைய சுயராஜ்யக்கட்சியின் காரியதரிசி எதேச்சாதிகாரமாய் அநுமதி கொடுத்ததையும் சூழ்ச்சி செய்ததையும் கண்டு ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு அடியிற்கண்ட தந்தியை பத்திரிகைகளுக்கு அனுப்பியிருக்கிறார்:—

"தேவஸ்தான திருத்த மசோதா விவாதம் கட்சிப் பிரச்னையன்று. ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகஞ் செட்டியார் உள்பட காங்கிரஸ்காரர்கள் இம் மசோதாவை ஆதரிக்கிறார்கள். மசோதாவை சுயராஜ்யக் கட்சியார் எதிர்ப்பது இம்மாகாணத்தில் காங்கிரஸிற்கு அழிவு தேடுவதாகும். ஆகவே சட்ட சபையிலுள்ள சுயராஜ்யக் கட்சி அங்கத்தினர் உறுதியான நடுநிலைமை வகிக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன். நான் சென்னை சர்க்காருக்குப் பின்வரும் தந்தியை அனுப்பியிருக்கிறேன்:—

"ராஜீய விஷயங்களில் அபிப்பிராய பேதமிருந்த போதிலும் எல்லாப் பார்ப்பனரல்லாத இந்துக்களும இம்மசோதாவை ஆதரிக்கின்றனர். மசோதாவிற்கு ஆட்சேபமிருப்பதுபோல் விளம்பரப்படுத்தப்படும் கிளர்ச்சியானது போலியானதும் சுயநலக் கூட்டத்தாரால் நடத்தப்படுவதுமாகும். மத பரிபாலன மசோதா சம்பந்தமாய் அவசியமான ஒத்துழைப்பை அரசாங்கத்திற்கு அளிக்கிறேன்."

திரு. நாயக்கரின் ஆதரவு.

திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கர் தந்தி மூலம் பத்திரிகளுக்கு அறிவித்ததாவது:—

"தேச மகா சபையின் பெயரால், இந்து மத பரிபாலன மசோதாவை எதிர்ப்பது போலிச்செயலாகும். மகந்துகளையும் மடாதிபதிகளையும் தொங்கிக்கொண்டு நிற்கும் சுயநலங்கொண்ட பார்ப்பனர்களின் இழிவான தந்திரங்கள் வெளிப்படையாய்ப் புலப்படுகின்றன. தென்னிந்தியப் பார்ப்பனரல்லாதாரின் சார்பாக மசோதாவை நான் முழு மனதுடன் ஆதரிக்கிறேன்."

திரு. முதலியாரின் கண்டனம்.

ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரை 'தமிழ்நாடு' பிரதிநிதி பேட்டி கண்டு பேசியபோது அவர் தெரிவித்ததாவது:—

"சமய உரிமையில் அரசாங்கத்தார் தலையிடு மறுக்கற்பாலதே. ஆனல் இந்து கோயில்களினதும் மடங்களினதும் நிலையை நோக்குழி அவைகளை எவ்வழியிலாதல் ஒழுங்கு படுத்தவேண்டுமென்பது எனது உள்ளக்கிடக்கை. இந்துக்கள் நீண்ட காலம் கவலையீனமாக இருந்தமையால் அரசாங்கத்தார் ஒரு சட்டம் கொணர இடந் தந்தது. இந்துக்கள் ஒன்று பட்டு ஓர் அமைப்பு கண்டு கோயில்களையும் மடங்களையும் ஒழுங்குபடுத்தும் வரை அச் சட்டம் நிலவல் வேண்டுமென்பது எனது கருத்து. அச் சட்டம் தோன்றிய நாள் தொட்டு இந்துக்கள் முயன்று உழைத்திருந்தால் தக்கதோர் அமைப்பு உருக்கொண்டிருக்கும். அம் முயற்சியில் தலைப்படாது அணித்தே சட்ட சபையில் வரப்போகும் திருத்தத்தைக் கடிய முயல்வது தீமைக்குத் துணைப் போவதாகும். இந்து சமயப் பற்றுடையோர் சட்டம் நிலவும் இந்நாளிலேயே கோயில்களையும் மடங்களையும் நல்வழிப்படுத்த வல்ல ஒரு சங்கங்கண்டு அதன் ஆட்சிக்கு அற நிலையங்களை கொணர்ந்து பின்னை சட்டத்தைக் கடிய முயல்வது அறிவுடைமை. சட்ட சபையில் போராடுவது வெறும் அரசியல் கிளர்ச்சியின் பாற் பட்டதாகும்".

திரு. எஸ். இராமநாதன் அவர்களின் கருத்து.

அகில பாரத சர்க்கா சங்கம், (கிளை ஈரோடு,) காரியதரிசியான திருவாளர் எஸ். இராமநாதன் எம். ஏ. பி. எல்., அவர்கள் எழுதுவதாவது:—

"இந்திய மகாஜனங்களை வருத்தி வருவது வறுமை மூட நம்பிக்கை என்னும் இரண்டு நோய்கள். ஒன்று தேகத்தைப் பாதிப்பது; மற்றொன்று மனதை வாட்டுவது. இவ்விரண்டு நோய்களையும் களைய எத்தனிக்காமல் சுயராஜ்யம் சம்பாதிப்பது வீண் பேச்சு.

"வறுமையைக் களைய மருந்தொன்று மகான் காந்தி கண்டுபிடித்திருக்கிறார். அம் மருந்தான சர்க்கார் இயக்கம் நாளடைவில் தேசமக்களை வறுமை பிணின்று விடுவிக்கும். மதத்தின் பெயரால் பெருகிவரும் மூட நம்பிக்கை யென்னும் மன நோயைக் களைய இந்துமத பரிபாலன மசோதா ஏற்பட்டிருக்கிறது. இம்மசோதாவிலுள்ள குற்றங்களைக் களைந்து திருத்தி யமைக்க முயலுவதே தேசபக்தர்களின் கடமை. தேசியத்தின் பெயரால் இம்மசோதாவின் கொள்கையை எதிர்ப்பது கூடாவொழுக்கமாகும்."

திரு. ஷண்முகம் செட்டியாரின் அபிப்பிராயம்.

இந்திய சட்ட சபையில் சுயராஜ்யக் கட்சி காரியதரிசியும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் காரியதரிசிகளில் ஒருவருமான திரு. ஆர். கே. ஷண்முகஞ் செட்டியார் பின் வருமாறு எழுதுகிறார்:—

"தேவஸ்தான மசோதா காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சி பிரச்னையல்ல. ஆகவே திரு. சீனிவாசஐயங்கார் இதை எதிர்த்த போதிலும் நான் இதை பலமாய் ஆதரிக்கிறேன். நானும் எனது நண்பர் டாக்டர் வரதராஜுலுவும் மற்றும் எங்களைப்போன்ற காங்கிரஸ்காரர்களும் இம்மசோதாவை நிறைவேற்ற எங்களால் இயன்றவற்றையெல்லாம் கட்டாயம் செய்தேதீருவோம்."

குறிப்பு:—தமிழ்நாடு காங்கிரஸ் காரியதரிசியான திரு. ஷண்முகஞ் செட்டியார் இது கட்சிப் பிரச்னை யல்லவென்று சொல்லுகிறார். ஆனல் அகில இந்திய காங்கிரஸ் காரியதரிசி இதை கட்சிப் பிரச்னையாகப் பாவித்து சுயராஜ்யக் கட்சி அங்கத்தினர்களை சட்ட சபைக்குள் போக அனுமதி கொடுத்ததையும், அதைக்கொண்டு திரு. சத்தியமூர்த்தி எல்லா அங்கத்தினர்களையும் வரும்படி அழைப்பதையும் பார்க்கும்போது கட்சிக் கட்டுப்பாடு, ஒழுங்கு முதலியவைகளைக் கொஞ்சமும் லட்சியஞ் செய்யாமலே இருவர்களும் நடந்துகொள்ளுகிறார்களென்பதை நண்பர்கள் அறிந்துகொள்ளலாம். (ப-ர்.)

பிரபலஸ்தர்களின் அபிப்பிராயங்கள்.

காலஞ்சென்ற டாக்டர் ஸர். எஸ். சுப்பிரமணிய ஐயர் பனகால் ராஜாவிற்கு 11-4-26 எழுதிய கடிதமாவது:—

"இந்துமத பரிபாலன மசோதாவை நிறைவேற்றி விட்டமையால் தாங்கள் நம் நாட்டிற்கு பெரிய தொண்டு செய்தவர்களாவீர்கள்"

திருப்பதி நகர பரிபாலன சபைத் தலைவரும், பிரபல வக்கீலுமான ஸ்ரீமான் டி. கே. நரசிம்மாச்சாரியின் அபிப்பிராயமாவது:—

"தேவஸ்தானச் சட்டம் அவசியமாகும். அதை கண்டபடி தூற்றுவதையும் இச் சட்டத்தை ஆதரிப்பவர்களை கண்டபடி திட்டுவதையும், இந்துமதம் ஆபத்திலிருக்கிறதெனக் கூறுவதையும் கண்டு வெரும் ஏமாந்துவிடக் கூடாது."

தமிழ்நாடு காங்கிரஸ், சுத்தர் போர்டு இவைகளுக்கு காரியதரிசியாயிருந்தவரும், பிரபலஸ்தருமான காலஞ்சென்ற ஸ்ரீமான் வ. மு. தங்கப்பெருமாள் பிள்ளை பி. ஏ., பி. எல். சொல்லியதாவது:—

"இந்துமத பரிபாலனச் சட்டம் பொது மக்கள் அனைவராலும் அவசியமெனக் கருதப்பட்ட சட்டமாகும். இச்சட்டத்திற்கு எதிராக செய்யப்படும் கிளர்ச்சிகளெல்லாம் போலியும், சுயநலமும் குடிகொண்ட கிளர்ச்சியுமேயாகும்"

[இதன் தொடர்ச்சியை 10-ம் பக்கம் பார்க்க]



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவற்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே

குடி அரசு.

அக்ஷய-ஞூ ஆவணி-மீ 6-உ

வரப்போகும் தேர்தல்.

—o—

தமிழர்களுக்கு ஓர் தனிப்பெரும் விண்ணப்பம்.

வரப்போகும் தேர்தல்கள் தென்னிந்திய தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் மிகவும் நெருக்கடியான சந்தர்ப்பத்தில் ஏற்படுகிறது. அதன் முக்கிய நோக்கம் நமது நாடு சுயராஜ்யம் பெறுவதற்கென்று சொல்லிக்கொள்ளப்பட்டாலும், சுயராஜ்ய மென்பது சுயமரியாதையும் சுயேச்சையும் உள்ள சமூகத்துக்குத்தான் பயன்படுமே அல்லாது அஃதில்லாதவருக்கு சுயராஜ்ய மென்பதும், பரராஜ்யமென்பதும் வித்தியாச மற்றதேயாகும். தென்னாட்டுத் தமிழ் மக்கள் பெரும்பாலும் சுயமரியாதையற்று, சுயேச்சையற்று மலத்தின்னும் பன்றிகளுக்கும் கழுதைகளுக்கும் புழுக்களுக்குமுள்ள சுதந்தரமும் சுயாதீனமுமின்றி கோடிக் கணக்கான மக்கள் உழல்வதை யாரும் மறுக்க முடியாது. இவர்களின் பொருட்டும், தேச முழுவதிலுள்ள இவர் போன்றார் பொருட்டும் விடுதலையை உத்தேசித்து மகாத்மா காந்தியடிகளால் ஆறு வருடங்களுக்கு முன் துவக்கப்பட்ட ஒத்துழையா இயக்கமானது பல்வேறு காரணங்களால் வேருடன் களையப்பட்டு விட்டது. இதன் பலனாய் ஏற்பட்ட நிலைமையானது சுயேச்சையும், சுய மரியாதையும், சுவாதீனமுமற்ற சமுகத்துக்கு, அதிலும் முக்கியமாய் தென்னாட்டு தமிழ் மக்களுக்கு முன்னிலும் அதிக கேவலமான நிலையில் கொண்டுவந்து விட்டு விட்டது.

பல ஆயிரக்கணக்கான வருடங்களாக நம் நாட்டு ஜனங்களென்று சொல்லிக்கொள்ளுவோரிலேயே ஒரு வகுப்பார் தங்களுடைய சுய நலத்தையே உத்தேசித்து பொது ஜனங்களிடையே வகுப்பு வித்தியாசத்தையும், துவேஷத்தையும் உண்டுபண்ணி தங்களை உயர்ந்தோரென்று சொல்லிக்கொண்டு தங்கள் உயர்விலும் வாழ்விலுமே கண்ணுங் கருத்துமாயிருந்து தேசத்தையும், மதத்தையும், மற்ற சமுகங்களையும் பாழாக்கியதுடன், அந்நிய தேசத்தார் நம் நாட்டிடையே படையெடுத்துவந்த போதெல்லாம் தங்கள் நன்மையின் பொருட்டே எதிரிகளுக்கு உளவு சொல்லியும் தேசத்தையும் மதத்தையும் காட்டிக்கொடுத்தும் அவர்களிடமே மந்திரி முதலிய உத்தியோகங்கள் பெற்று செல்வாக்கடைந்தும், நமது நாட்டாரை அடக்கியாள அவர்கள் ஓர் ஆயுதமாகவும் பயன்பட்டு வந்திருக்கிறார்கள். இதற்கு உதாரணமாக, இச் சுயநலக் கூட்டத்தார் தங்கள் சூழ்ச்சியாலும் தந்திரத்தாலும் தாங்களே நமது மதாச்சாரியார்களாகவும், குலகுருக்களாகவும், படித்தோர்களாகவும், தேச நன்மைக்கும் சமூக நன்மைக்கும் ஏற்பட்ட இயக்கங்களுக்கு தலைவர்களாகவும், அரசாங்கத்தை நடத்த அவர்களுக்கு ஊழியர்களாகவுமிருந்து அரசாங்கத்தை நடத்திக்கொடுத்துக் கொண்டும், அதேசமயத்தில் அரசாங்கத்திற்கு ஒற்றர்களாயிருந்து, நாட்டின் உயிர் நாடியைக் காட்டிக்கொடுத்தும் ஆகிய இவ்வளவு காரியங்களையும் செய்து வருவது இக்கூட்டத்தார் தான் என்பதை இப்பொழுதும் காணலாம்.

அல்லாமலும் ஆதிகாலத்தில் மக்கள் ஒற்றுமைக்கும், சமத்துவத்துக்கும், சகோதரத்வத்துக்கும், ஜீவகாருண்யத்துக்கும், அஹிம்சைக்கும் ஏற்பட்ட இயக்கங்களுக்கும் சாதனங்களுக்கும் விரோதிகளாயிருந்து தங்கள் சுய நன்மைக்காகவே அவைகளை ஒழித்து தேசத்தை இக்கதிக்கு கொண்டு வந்தவர்களும் இவர்களேதானென்பதை சரித்திர மூலமாகவும் நேரிலும் காணலாம். மகாத்மாவால் ஏற்படுத்தப்பட்ட அஹிம்சா தர்மத்தோடு கூடிய விடுதலை இயக்கத்தை ஆரம்ப முதல் இன்று வரையிலும் பல சூழ்ச்சிகளாலும் பாழாக்கினவர்கள் இவர்களே யென்பதை எவரும் மறுக்கமாட்டார்கள். இதை மகாத்மா அவர்களே தம்முடைய இயக்கம் சீர் குலைந்ததற்குக் காரணம் படித்த வகுப்பினர்தான்! படித்த வகுப்பினர்தான்!! எனப் பலமுறை கதறியிருக்கிறார். நாட்டில் படித்த வகுப்பார் யாரென்பதை நாம் சொல்லத் தேவையில்லை. அல்லாமலும், பெல்காம் காங்கிரஸின் அக்கிராசனப் பிரசங்கத்தில் இந்தியாவுக்கு பிரிட்டிஷார் செய்த கெடுதியை விட பார்ப்பனர்கள் செய்த கெடுதி குறைவானதல்லவென்று மகாத்மாவே சொல்லியிருக்கிறார். ஆதலால் நமது நாடு முன்னேற்றமடையவோ, மக்கள் யாவரும் சமம் என்னும் உணர்ச்சி அடையவோ, எல்லோரும் சமத்துவத்துடன் வாழவோ, நம்மால் ஏற்படுத்தப்படும் இயக்கம், தங்கள் சூழ்ச்சியால் பொது மக்களை ஏமாற்றி தங்கள் மாய வலையில் கட்டுப்படுத்தி எதற்கும் தாங்களே முன்னணியிலிருந்து கொண்டு எதையும் தங்கள் சௌகரியத்துக்கு உபயோகப்படக் கூடிய மாதிரியில் திருப்பிக்கொள்ளும் சுய வஞ்சகர்களான சுய நல வகுப்பார் கையில் சிக்காமல் தப்ப வழி தேடவேண்டும். அங்ஙனம் நாம் வழி தேடாவிட்டால் நம் விடுதலைக்கென ஆரம்பிக்கப்படும் எந்த இயக்கமும், அதற்காக நம்மால் செய்யப்படும் எவ்வித தியாகமும், அனுபவிக்கப்படும் எவ்வித கஷ்டமும் பயன் தராததோடு இப்பொழுது நாமிருக்கும் நிலையிலும் இன்னும் கீழிறங்க உதவியாகிவிடும். ஆகையால் வரப்போகும் சட்டசபை முதலிய தேர்தல்களில் காங்கிரசென்றோ சுயராஜ்யமென்றோ தேசம் என்றோ பார்ப்பனரின் மாய்கையில் விழுந்து அக்கூட்டத்தாருக்கு நமது ஓட்டுகளைக் கொடுத்து ஏமாந்து போகாமலிருக்கும்படி நாம் எச்சரிக்கை செய்கிறோம்.

தென்னாட்டில் பொதுவாக இக் கூட்டத்தாரை நீக்கிய பொது ஜனங்களுக்கு பார்ப்பனரல்லாதார் என்ற பெயர் வழங்கப்பட்டு வருகிறது. முக்கியமாக இதில் கிறிஸ்தவர்கள், முகமதியர்கள், ஆங்கிலோ—இந்தியர் முதலிய இந்துக்களல்லாதவர்களும் பார்ப்பனரல்லாதவர்களே. இந்துக்களுக்குள்ளும் பார்ப்பனர் நீங்கிய மற்றவர்கள் பார்ப்பனர்களால் ஏற்படுத்தப்பட்ட பல ஜாதிப் பெயர்கள் சொல்லிக்கொள்ளப்பட்டாலும், அவர்களும் பார்ப்பனரல்லாதவர்களே. அல்லாமலும் தீண்டாதாரெனக் கூறி தொடக்கூடாதவர்கள், பார்க்கக் கூடாதவர்கள் என்று தள்ளி வைத்திருக்கும் ஒரு பெரும் கூட்டத்தாரும் பார்ப்பனரல்லாதவர்களே. இவர்கள் யாரும் நாம் மேற்சொன்ன பார்ப்பனர்களின் மாயவலையினின்றும் தப்பி சுய மரியாதையுடன் வாழவேண்டுமானால், தங்களுக்குள் ஏற்பட்டிருக்கும் சிறு சிறு வகுப்பு வித்தியாசங்களையும் பொருளற்ற ராஜீய அபிப்பிராய வித்தியாசங்களையும் மறந்து விடுவதோடு தங்கள் சுய நன்மைக்காக பார்ப்பனர்களுக்கு ஒற்றர்களாகவும், காட்டிக் கொடுப்பவர்களாகவும் இருக்கும் சிறுமைக் குணங்களை விட்டு எல்லோரும் முன்னுக்கு வரவேண்டுமென்ற எண்ணத்துடன், சூழ்ச்சியின்றியும் துவேஷமின்றியும் மனப்பூர்வமாக ஒன்றுபட்டு பார்ப்பனரல்லாதாருக்கே எல்லாப் பார்ப்பனரல்லாதாரும் கண்டிப்பாய் தங்களது ஓட்டைக் கொடுக்கவேண்டியது அவரவர்களின் சுயமரியாதை தர்மமென்றே சொல்லுவோம்.

திரு. சீனிவாசய்யங்காரின் தைரியம்.

—

திருவாளர் எஸ். சீனிவாசய்யங்கார் அவர்கள் தேவஸ்தான சட்டத்தைப் பற்றி எழுதும்போது பார்ப்பனரல்லாத காங்கிரஸ்காரர்கள தேவஸ்தான சட்டத்தை ஆதரிப்பதாக மனப் பூர்த்தியாய் வேண்டுமென்றே இல்லாத காரியத்தைச் சொல்லுகிறார். திரு. சீனிவாசய்யங்காருக்கு பொய் சொல்லுவதிலும் மறுபடியும் அதை மறுத்து இல்லை என்று சொல்லுவதிலும் அனுபவம் அதிகமாகி அதன் பலனாய் எவ்வளவு திருப்பாட்டு கிடைத்தபோதிலும் அதை ஏற்று ஏற்று அவர் மானம் நன்றாய் மரத்துப் போய்விட்டது. திருவாளர்கள் மாளவியா ஜயக்கர், கேல்கர், நரசிம்மராஜு, இராமலிங்க செட்டியார், ஆந்திர தேசத்து தேசியப் பத்திரிகைகள் முதலிய பிரபல கனவான்கள் எல்லோரிடமும் திரு. சீனிவாசய்யங்கார் சொல்லியவற்றை யெல்லாம் வெகு தைரியமாய் இல்லையென்று ஒரே அடியாய் சொல்லிவிட்டார். பத்திரிக்கைகள் பெரும்

பாலும் பார்ப்பன ஆதிக்கமுடையவைகளாகவே இருந்துவிட்டதால் அவைகள் இவற்றைப்பற்றி ஒன்றும் எழுதாமல் திரு. அய்யங்கார் புளுகுக்கு ஆதரவளித்து வருகின்றன. சில பார்ப்பனரல்லாத பத்திரிக்கைகளும், நெஞ்சில் உரம் இல்லாததால், இவற்றைப்பற்றி ஒன்றும் எழுதாமல் தந்திரமாய் இருந்துவிட்டன. இதன் பலனைத் திரு. அய்யங்காருக்கு பொய் சொல்லுகிற விஷயத்தில் வரவர தைரியம் அதிகமாகி கொஞ்சம்கூட மானம் வெட்கம் பயம் என்பது அடியோடு இல்லாமல்போய் இப்போது தேவஸ்தான சட்டத்தை பார்ப்பனரல்லாத காங்கிரஸ் வாதிகள் ஆட்சேபிக்கிறார்கள் என்று எழுதியிருக்கிறார். அப்படியானால் அவர்கள் பெயர் என்ன? எப்போது ஆதரித்தார்கள்? பார்ப்பனரல்லாத காங்கிரஸ் மெம்பர்களான திருவாளர்கள் ஆர். கே. ஷண்முகம் செட்டியார், டாக்டர் வரதராஜுலு நாயுடு, திரு. வி கலியாணசுந்தர முதலியார் தண்டபாணி பிள்ளை, எஸ். இராமநாதன் முதலிய பழய கனவான்களுள் காங்கிரசுக்காக தியாகம் செய்தவர் எல்லாம் தேவஸ்தான சட்டத்தை ஆதரிக்கும்போது நமது ஸ்ரீமான் அய்யங்காருக்கு இச் சட்டத்தை ஆக்ஷேபிக்க கிடைத்த காங்கிரஸ் மெம்பர்கள் யார் என்பதை பொது ஜனங்களுக்கு தெரியப்படுத்தினால் கண்ணியமாயிருக்கும். அதில்லாமல் வக்கில் வாதம் பேசுவது போல் மனச்சாக்ஷிக்கு விரோதமாய் பொய் பேசுவது எவ்வளவு மோசமான காரியம் என்பதை உணரும் வாசகர்கள்தான் புத்தி சொல்லவேண்டும்.

சென்ற இரண்டு மூன்று தினங்களுக்கு முன் ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் "யோக்கியமுள்ள பார்ப்பனரல்லாதார் யாரும் காங்கிரசில் இல்லை" என்று சொல்லும்போது அதற்கு மறுப்பாக திரு. சீனிவாசய்யங்கார் கடற்கரையில் பேசும்போது காங்கிரசில் பார்ப்பனரல்லாதார் இல்லை என்று ஜஸ்டிஸ் கட்சியார் சொல்வது தப்பு என்றும் பார்ப்பனரல்லாதாரின் உண்மையான தலைவர்களாகிய திருவாளர்கள் கலியாண சுந்தர முதலியார், டாக்டர் வரதராஜுலு நாயுடு போன்றவர்களெல்லாம் இருக்கிறார்கள் என்று சொல்லி அவர்களின் எழுத்துக்களையும் பிரசங்கங்களையும் படித்துக்காட்டி பாமர ஜனங்களை திருப்தி செய்தார்கள். ஆனால் இப்போது அவர்கள் மாறுபட்ட அபிப்பிராயங் கொண்டதும் நமது திரு. அய்யங்கார் காங்கிரசில் வேறு பார்ப்பனரல்லாதார் இருப்பதாகச் சொல்ல வந்துவிட்டார். அது யாரை நினைத்துக்கொண்டு சொல்லுகிறாரோ தெரியவில்லை. ஒரு சமயம் திருவாளர்கள் ஜெயவேலு, பாவலர், மயிலை இரத்தின சபாபதிமுதலியார், ஜனாப்கள் ஷாபிமுகமது, ஹமீத்கான் ஆகிய இவர்களை நினைத்துக் கொண்டு சொல்லுகிறாரோ, அல்லது இன்னும் யாரையாவது தன்னுடைய டிக்கட் பாக்கட்டில் வைத்துக் கொண்டிருக்கிறாரோ தெரியவில்லை. இந்தப் பிரபு இவ்வளவும் போதாமல் அஸ்ஸாம் காங்கிரசுக்குத் தலைவராகப்போகிறார். பார்ப்பன சக்தி எவ்வளவு இருக்கிறது என்பதை இப்போதாவது தமிழ் மக்கள் உணர்வார்களா?

‘சுதேசமித்திர’னின் பித்தலாட்டம்

குடந்தையில் கூடிய சோழிய வேளாள மகாநாடு மிக்க பிரபலமான மகாநாடுகளில் ஒன்றென்று மதிக்கத்தக்கதாய் பீடும் பெருமையுடன் வெற்றியோடு நிறைவேறியது. ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்த மந்திரி ஒருவர் தலைமை வகித்த மகாநாடு காந்தி காங்கிரஸ் பிரமுகர்களையும் ஈர்த்து விட்டதென்றால் இதன் பெருமையையும் கூற வேண்டுமோ?

* *

இம்மகாநாட்டில் திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கர் நிகழ்த்திய சொற்பெருக்கின் ஒரு பகுதியை கோடாகக் கொண்டு துவேஷக் கண்ணுடியணியப் பெற்ற "சுதேசமித்திரன்" 18-8-26 தேதி தன் ஜாதிக் குணத்தைக் காண்பித்து விட்டான். ‘அபத்தப் பஞ்சாங்கம்’ என ஆபாசத்தலையங்கமிட்டு ஊத்தைவாய் திறந்து கக்கிய "மித்திர"னுக்கு சூடு போடவேண்டியது நம்முடைய, ஏன், தமிழருடைய கடமையாகும்.

* *

"மித்திரன்" தன் புன்மை பொலிந்து, பேதமை மலிந்து, நன்மை நலிந்து, சிறுமை செறிந்து ஊளையிடும் கட்டுரையில் திரு. நாயக்கரது ‘எழுத்தும் பிரசங்கங்களும் வரவர விசித்திரமாயிருக்கின்றன’ என்று தூற்றுகிறான். "மித்திர"னுக்கு விசித்திரமாக மட்டும் தோன்றாது, "தேசத்துரோக" மாகவும் தோன்றலாம். ஏனெனில் பார்ப்பனக் கட்சியை ஆதரித்து எழுதுவதும் பேசுவதும் தான் தேச நன்மைக்கு உகந்ததென்று கருதுவது "மித்திர"னின் வழக்கம். பார்ப்பனரல்லாதாரின் சுயமரியாதையைக் காத்து பேசுவதும் எழுதுவதும் "மித்திரனின்" இருதயத்தில் பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கொழுவைப் பதிய வைப்பது போலிருக்குமாதலால், இது ‘விசித்திரமாக’வும் ‘தேசத் துரோகமாக’வும் தோன்றலாம்.

* *

"சீக்கிரத்தில் என்றைக்காவது ஒரு நாள் கவர்னரின் மாளிகைக்கு அவரை (திரு. நாயக்கரை) வலுக்கட்டாயமாகத் தூக்கிக் கொண்டு போய், சர்க்கார் தாஸருக் குரிய முத்திரையைப் போட்டு விடுவார்களென்று நாம் நிச்சயமாகக் கூறலாம்" என்று "மித்திரன்" கூறுகிறான். "தான் திருடி அயல் வீடு நம்பாள்" என்பது ஒரு வழக்கச் சொல். அதுபோன்றே "மித்திரன்" நாள் தோறும் தன்தலையங்கத்தின் மேல் அரசாங்க முத்திரையைத் தாங்கி வெளிவருவதையும் திரு. சர். சி. பி. இராமசாமி ஐயர் போன்ற சர்க்கார் ‘தாசர்’களுக்கு வக்காலத்து வாங்கி எழுதுவதையும் மறந்து-மறைத்து-இவ்வாறு கூறுகிறான். திரு. நாயக்கருக்கும் சர்க்கார் தாசர் முத்திரைக்கும் தூரமதிகம். திரு. நாயக்கருக்கு சர்க்கார் ‘சிறை’ முத்திரை போடப்படலாமேயன்றி சர்க்கார் ‘தாஸர்’ முத்திரை போடமாட்டார்கள்—போட்டாலும் உதறிவிடுவார் என்பதை நம் சகோதிரர்கள் நன்கு அறிவார்களாதலால் அவர்களே இது சம்பந்தமாய் "சுதேசமித்திர"னுக்கு சூடு கொடுக்க முற்படுவார்களென்று இத்தோடு விட்டு விடுகிறோம்.

* *

"அருவருத்த சாப்பாட்டிற்கு முரமுரத்த பட்டினிமேல்" என்னும் வழக்க வாக்கியத்தைப்போல் வயாரத் திட்டுவதற்கு வழி கிடைக்காவிட்டால், எதாவது ஒரு பொய் முகாந்தரம்காட்டியோ உண்மையைத் திரித்துக் கூறியோ திட்டவேண்டுமென்பது "மித்திரன்" னின் பரந்த கொள்கைகளில் சிறந்து மிளிர்கிறது. "கவர்ன்மெண்டை விட......காங்கிரஸ்தான் பார்ப்பனரல்லாதாருக்கு நாசம் விளைவித்தது" என்று திரு. நாயக்கர் பல முறை பல இடங்களில் பேசியிருக்கிறார். அதை நாமும் பெரிய பெரிய தலையங்கங் கட்டி வெளியிட்டிருக்கிறோம். அதை யெல்லாம் விட்டு விட்டு இப்போது "நாயக்கர் நாக்கில் நரம்பில்லாமல் பேசுகிறார். அவருடைய கூற்றில் கடுகளவு கூட உண்மை கலப்பில்லை" என்று தன் ஜாதிப் புத்தியைக் காட்டி தன் குலத்துக்கேற்ற வார்த்தைகளை உபயோகப் படுத்துகிறான். பார்ப்பனரல்லாதாரின் முன்னேற்றத்தைக் கெடுத்தது, மகாத்மாவால் நடத்தப்படாத, காங்கிரஸ் என்றே இன்னமும் அழுத்தமாக வன்மையுடன் கூறுகிறோம்.

* * *

இம்மட்டோடு நில்லாது "கனம் பனகால் ராஜா முதலியோர் பெரிய பெரிய பதவி வகிப்பதற்கும் திரு. நாயக்கருக்கு அரசியல் உலகில் முக்கியஸ்தம் உண்டுபண்ணியதற்கும் காரணமாயிருந்தது காங்கிரஸ் மகாசபைதான்" என்று "மித்திரன்" தன் குழம்பிய சித்தை கொண்டு கூறுகிறான். இது நெஞ்சாரப் பொய் சொல்லும் வஞ்சகன் கூற்று. காங்கிரஸ் மூலம் உயர்ந்த உத்தியோகத்திற்கு வந்தவர்கள் சர். சுப்பிரமணிய ஐயர், சர். பி. என். சர்மா, மகாமகா கனம் சீனிவாச சாஸ்திரி, சர். சி. பி. இராமசாமி ஐயர் முதலிய பார்ப்பனர்களேயன்றி பனகல் ராஜா அல்ல என்பதையும் பார்ப்பனரல்லாதாரின் கிளர்ச்சியும் இயக்கமுமே பனகல் ராஜா முதலியோர் அத்தகைய உயர்பதவிக்கு வரக்காரணமென்பதையும் திரு. நாயக்கரும் அவரது உடன்பிறந்த தமிழர்களும் காங்கிரசில் சேர்ந்து ஊர் ஊராய் கிராமம் கிராமமாய் பிரசாரம் செய்தும் சிறை சென்றதாலுமே தமிழ்நாட்டில் காங்கிரசுக்கு இவ்வளவு செல்வாக்கு ஏற்பட்டதேயன்றி, "மித்திர"னைப் போன்று சொல்வதொன்று செய்வது வேறாய், குடிக்காதே என்று உட்புறத்தில் எழுதி வெளிப்புறத்தில் குடிவகையின் விளம்பரம் செய்து வந்ததாலல்ல வென்பதையும், அறிவின்றி அயோக்கியத் தனமாக இறுமாந்து எழுதும் "மித்திரனு"க்கு அறிவுறுத்துகிறோம்.

* * *

தமிழ் மக்களுக்கு அவமானத்தைத் தேடுவதே தன் குலத் தொழிலாகக் கொண்ட "மித்திரனை" ஒழிக்க தமிழ்நாட்டு இளங்காளைகள் சிலர் கங்கணங் கட்டிக் கொண்டிருக்கின்றனர். தமிழர் "மித்திரனை" ஆதரிப்பது விழலுக்கிறைத்த நீருக்குச் சமானமே யாகும் "மித்திரன்" பார்ப்பனீயத்திற்கும் பார்ப்

"விதவா விவாக விளக்கம்."

பழுத்த ஞானமும் நீடிய அனுபவமும் கொண்ட அறிஞர் திருச்சிபுரம் திருவாளர் சி. பி. இராஜகோபால் நாயுடு அவர்கள் தாம் ஆக்கிய விதவா விவாக விளக்கம் என்னும் புத்தக அச்சுப் பிரதியை அனுப்பி எனது அபிப்பிராயத்தை எழுதுமாறு எழுதியிருந்தார். விதவா விவாகத்தைப்பற்றி நான் தீவிரக் கருத்துக் கொண்டவனேயாகிலும் போதிய அமயமும் அவகாசமும் வாய்த்திலாமையான் அதனை ஊன்றிப் படித்து விரைவில் எனது கருத்தினை வெளியிட வியலாது போயிற்று. பிறகு அப்புத்தகம் முடிவுபெற்று புத்தக ரூபமாய்க் கிடைக்கப் பெற்றேன். அதனை அமைதியுடன் படித்து எமக்குத் தோன்றிய சில கருத்துக்களை எழுத முற்பட்டேன்.

இந்திய நாட்டின் ஆளுகை உரிமை இந்தியருக்கே கிடைக்க வேண்டுமென அரசியல் சீர்திருத்தக்காரர்களும், இந்திய மக்களுக்குள்ளிருக்கும் வகுப்புப் பிரிவினையும் ஜாதி வேற்றுமையும் தொலைய வேண்டுமென்பதாக சமூக சீர்திருத்தக்காரர்களும் போராடுகிறார்களேயன்றி பெண் மக்களுள் ஒரு பகுதியார் அழிந்து வருவதை பாராமுகமாகவே பார்த்து வருகின்றனர். (இயற்கை தேவியார்) சிருஷ்டிக் கர்த்தா, மக்கட் படைப்பிலடங்கிய ஆண் பெண்களை ஏற்றத் தாழ்வுடன் படைக்கவில்லை என்பதை அறிவுடைய உலகம் ஏற்கும். அங்க அமைப்பிலன்றி அறிவின் பெருக்கிலோ வீரத்தின்மாண்பிலோ ஆண் பெண்களுக்குள் ஏற்றத் தாழ்வான வித்தியாசம் காண இயலுமோ? இயலவே இயலாது. ஆடவரிலும் சரி பெண்டிரிலும் சரி, முறையே அறிவாளிகளும் ஆண்மையுடையோரும், அறிவிலிகளும் பேடிகளும் உண்டு. இவ்வாறிருக்க, திமிர்படைத்த இந்த ஆண் உலகம் சாந்த குணபூஷணமான பெண்ணுலகைத் தாழ்த்தி அடிமைப் படுத்தி வருதல் முறையும் தர்மமுமான செயலாகாது.

ஹிந்து மத ஆண் உலகம் தங்களது பெண் உலகத்தின் மாட்டு பூண்டொழுகும் கொடுமைச் செயல்கள் பலவற்றில் இங்கு நாம் விதவைகளைப் பற்றி மட்டும் கவனிக்க வேண்டியுளது.

உலக இன்பத்தை நுகர்ந்து அலுத்துப் போயிருக்கும் பழுத்த கிழவனேயாயினும், தன் மனைவியார் இறந்து பட்டவுடன் மறுமணம்புரிய முயலுகின்றான். அதுவும் வனப்பு மிகுந்த—எழில் பொருந்திய இளஞ் சகோதரிகளையே தன் மணத்திற்குத் தேர்ந்தெடுக்கின்கிறான். ஆயின் ஓர் பெண்மகள் தன் கொழுநனை இழந்து விட்டால், அவள் உலக இன்பத்தையே சுவைத்தறியாதவளாயிருப்பினும்-தன் ஆயுட்காலம் முற்றும் அந்தோ! தன் இயற்கைக் கட்டுலனை இறுக மூடி, மனம் நொந்து, வருந்தி மடிய நிபந்தனை ஏற்பட்டு விடுகிறது. என்னே! அநியாயம்!

ஹிந்து சகோதரர்கள் இவ்வாறு தங்கள் சமூகம் அநியாயமாய் அழிந்து வருவதை பார்த்துக் கொண்டு வருவது பெரும்பாபகரமான செயலாகும்.

முன் நாளில் தன் கணவனைப் பறிகொடுத்தமனைவியும் உடன் கட்டையேறுதல் வழக்கமாயிருந்தது. இக்கொடிய வழக்கத்தை அக்காலத்தில் ஆங்கிலோ இந்திய வியாபாரக் கூட்டத்தின் தலைவராயிருந்தவரான ஹேஸ்டிங்ஸும், சுவாமி தயானந்தசரஸ்வதி போன்ற இந்திய நாட்டு அறிவாளிகளும் எடுத்துக்கொண்ட பெருமுயற்சியால் நிறுத்தப்பட்டது. உடன் கட்டையேறுதலை நிறுத்துவதற்காகப் போராடிய அக்காலத்திலும் ஆச்சாரமே அழிந்து போவதாகவும் மதமே கெட்டுப் போவதாகவும் பெருங்கிளர்ச்சி ஏற்பட்டது. ஆனால் நாளடைவில் அக் கூக்குரலும் அடங்கி, 'ஸககமனம்' என்னும் உடன் கட்டையேறுதலான கொலை வழக்கமும் அறவே மறைந்தது.

இது போழ்து நம் நாட்டில் விதவைகள் மறுமணம் செய்து கொள்ளலாகாதென்னும் வழக்கமிருப்பது பாரபட்சம் நிரம்பிய கொடுமையான செயலாகும். தன் மனைவியை இழந்த கிழவன் மறுமணம் செய்து கொள்ளலாமென்றும் தன் கணவனை இழந்த மகப்பேறு பெறாத இளமங்கை மறுமணம் செய்து கொள்ளலாகாதென்றும் கூறுவது நடுநிலைமை கொண்ட அறச் செயலாகா.

விதவைகள் மறுமணம் செய்து கொள்ளும் வழக்கம் கற்புக்குப் பங்கம் விளைப்பதாகும் எனக்கூறினால் அது பொருந்தாது. விதவைகளை மறுமணம் செய்விக்காதிருந்ததினாலேயே அவர்கள் கற்பழிந்து மாய்கின்றனர். காமச்சுவை கருதும் இளங்கைம் பெண்கள் படிற்றொழுக்கத்தில் விழுந்து, அதனால் கருப்பத்தரித்து இரண்டோர் திங்களில் சிசுஹத்தி தோஷத்திற்கு உள்ளாகின்றார்கள். இப்பாவம் யாரைச் சாரும்? விதவைகளை மறுமணம் செய்து கொள்ளலாகாதென்று கட்டாயப் படுத்திவரும் பெற்றோர்களையே சாரும். மறுமணம் விரும்பாத பெண்களைத் தவிர்த்து ஏனைய கைம் பெண்களுக்கு மறுமணம் செய்வித்தலே நன்று.

விதவைகளின் கலியாணத்தைப் பற்றி இவ்வாறு எழுதும் நான் எழுத்தளவோடும் சொல்லளவோடும் ஆதரிக்கின்றேனா அன்றி செய்கையிலும் ஆதரித்துள்ளேனா என்ற ஐயம் அன்பர்களுக்குத் தோன்றலாம். இதன் பொருட்டேனும் எனது கருத்தை பிரதிபலிக்கும் செய்கையைக் கூறவிரும்புகிறேன்.

நான் கர்நாடக பலிஜவார் வகுப்பைச் சேர்ந்தவன். எனது வகுப்பின் பெண் மக்கள் முக்காடுடன் கோஷாவாக இருக்க வேண்டியவர்களெனவும் விதவா விவாகத்தை அனுமதிக்கப்படாதவகுப்பினரெனவும் வழங்கப்படுபவர்கள். நான் பிறந்த குடும்பமோ அளவுக்கு மிஞ்சிய ஆசாரத்தையும் வைணவசம்பிரதாயத்தையும் கடுமையாய் ஆதரிக்கும் குடும்பம். இப்படியிருந்த போதிலும் என்னுடைய 7-வது வயதிலிருந்தே பக்ஷனில் உயர்வு தாழ்வு கற்பித்தலையும் ஒருவர் தொட்டதை மற்றொருவர் சாப்பிடலாகாதெனச் சொல்வதையும் நான் பரிகாசம் செய்து வந்ததோடு யாரையும் தொடுவதற்கும் எவர் தொட்டதையும் சாப்பிடுவதற்கும் நான் சிறிதும் பின் வாங்கியதே கிடையாது. என்னை, இளம் போதிலிருந்தே எங்கள் வீட்டு ஆக்குப் புரைக்குள் செல்ல அனுமதிப்பதில்லை. நான் தொட்ட செம்பை, எனது தகப்பனார் தவிர, மற்றையார் கழுவாமல் உபயோகப்படுத்த மாட்டார்கள். எங்கள் குடும்ப ஆச்சார அநுஷ்டானங்களைப்பார்த்து பொறாமைப் படுபவர்கள் என்னைப்பார்த்து சாந்தியடைந்து விடுவார்கள். "நாயக்கருக்கு அவர்கள் ஆச்சாரத்திற்கேற்றாற்போல் தான் ஒரு பிள்ளை என்றாலும் பிள்ளை நவமணியாய்ப் பிறந்திருக்கிறது," என்று சொல்லுவார்கள். என்னுடைய 16-வது வயதிலேயே பெண்

பனர் முன்னேற்றத்திற்குமட்டுமே குறி கொண்டுழைக்கிறான் என்பதையும் உண்மையில் தேசவிடுதலைக் குழைக்கவில்லை என்பதையும் சின்னாட்களுக்கு முன் அவன் சர். சி. பி. ஐயருக்காகப் பரிந்து பேசியதிலிருந்து தெள்ளிதின் அறிந்து கொள்ளலாம். ஆதலால் தமிழர்கள் "மித்திரனை" பகிஷ்கரிக்க முயல்வார்களாக.

* * *

குடந்தை மகாநாட்டில் திரு நாயக்கர் "வரப்போகும் தேர்தலில் சங்கராச்சாரியாரே நின்றாலும், அவசியம் ஏற்படின், கேவலமான பார்ப்பனரல்லாதவருக்கே ஓட்டுப் போடுங்கள். வேறு நடந்தால் அது தேசத் துரோகமாகும்" என்று கூறியுள்ள வேண்டுகோளை தமிழர்கள் ஒவ்வொருவரும் நெஞ்சத்தில் இருத்தி, சுயராஜ்யத்தை விட சுயமரியாதையே முக்கியமென்பதை உணர்ந்து, நடக்க வேண்டியது பார்ப்பனரல்லாதவர் கடமையாகும்.

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

தஞ்சை பிரபல வக்கீல் ஸ்ரீமான் கே. நடராஜன் பி. ஏ. பி. எல், தெரிவித்ததாவது:—

"இச்சட்டத்தை மனமார வாழ்த்தி ஆதரிப்புக்கொடுத்து நமது சமயங்களும், கோயில்களும் பொலிவுற மென்மேலும் ஏற்பாடு செய்யாமல்; அதைத் தவிர்த்து பேசுவது பெரும் முட்டாள்தனமேயாகும்."

சென்னை கார்ப்பரேஷனில் சுயராஜ்யக் கட்சி மெம்பரான ஸ்ரீமான் எம். சிங்காரவேலு செட்டியார் பி. ஏ. பி. எல். கொடுத்த அபிப்பிராயமாவது:—

"***இச் சட்டத்தை எவர் கொண்டு வந்தபோதிலும் இது நன்மை தரக்கூடிய சட்டமென்பதை மறுக்க முடியாது. *** ஹிந்து மதத்திற்கு ஆபத்து வந்து விட்டது என்பது சரியான காரணமாகாது. உடன் கட்டை ஏறுதல் என்னும் வழக்கம் ஒழிக்கப்பட்ட காலத்திலும் இந்தக் கூச்சல்கள் எழுந்தன. லட்சக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களைச் சரியான நிர்வாகத்திற் குட்படுத்தக்கூடிய இந்தச் சட்டத்திற்கு விரோதமாக ஏன் கிளர்ச்சி செய்யவேண்டும்?"

மக்களை தனித்த முறையில் பழக்குவதும் அவர்களுக்கென சில கட்டுத் திட்டங்களை ஏற்பாடு செய்வதையும் ஆண் மக்களின் அகம்பாவம் என்று நினைத்து வந்தேன்.

இவ்வாறாக, என் தங்கை தனது இளம் வயதிலேயே ஓர் பெண் குழந்தையையும் ஓர் ஆண் குழந்தையையும் விடுத்து இன்னுயிர் நீத்தாள். அவற்றுள் ('அம்மாயி' என்றழைக்கப் பெறும்) அப் பெண் குழந்தைக்கு அதன் 10-வது வயதில் சிறந்த செல்வாக்கோடு ஒரு செல்லக் கலியாணம் செய்து வைத்தோம். கலியாணம் செய்த 60-ம் நாள் அப் பெண்ணின் கணவன் என்னும் 13-வயதுள்ள சிறு பையன் பகல் 2-மணிக்கு விஷபேதியால் விண்ணுற்றான். அவன் இறந்தான் என்ற செய்தியைக் கேட்டதும் அப் பெண் குழந்தை என்னிடம் ஓடி வந்து "மாமா! எனக்குக் கலியாணம் செய்துவை என்று நான் உன்னைக் கேட்டேனா? இப்படி என் தலையில் கல்லைப் போட்டாயே" என்று ஓவென்று அலறிய சத்தத்தோடு என் காலடியில், மண்டையில் காயமுண்டாகும்படி, திடீரென்று விழுந்தது. துக்கம் விசாரிப்பதற்காக அங்கு வந்திருந்த ஆண் பெண் உள்பட சுமார் 600, 700, பேர்கள் அக் குழந்தையையும் என்னையும் பார்த்த வண்ணமாய் கண்களிலிருந்து தாரை தாரையாய் நீர் வடித்தனர். எனக்கும் அடங்கொணாத அழுகை வந்து விட்டது. ஆனால் கீழே கிடந்த அந்தக் குழந்தையை நான் கையைப் பிடித்து தூக்கும் போதே அதற்கு மறுபடியும் கலியாணம் செய்து விடுவது என்கிற உறுதியுடனேயே தூக்கினேன்.

பிறகு அந்தப் பெண் பக்குவமடைந்த ஒரு வருடத்திற்குப் பின் அதற்கு கலியாணம் செய்ய நானும் எனது மைத்துனரும் முயற்சி செய்தோம். இச்செய்தி எனது பெற்றோருக்கும் மற்றோருக்கும் எட்டவே அவர்கள் இதை தங்கள் வகுப்புக்கு ஒரு பெரிய ஆபத்து வந்துவிட்டது போலக் கருதி பெரிதும் கவலைக்குள்ளானவர்களாகி நாங்கள் பார்த்துவைத்த இரண்டொரு மாப்பிள்ளைகளையும் கலைத்தார்கள். முடிவில் எனது மைத்துனரின் இரண்டாந்தாரம் மைத்துனரைப் பிடித்து சரி செய்து, எவரும் அறியாவண்ணம் பெண்ணையும் மாப்பிள்ளையையும் சிதம்பரத்திற்கழைத்துச் சென்று அங்கு கோயிலில் கலியாணம் செய்வித்து ஊருக்குக் கூட்டிவந்தனர். ஆனால் நான் அங்கு போகாமல் ஊரிலேயே இருக்க வேண்டியதாயிற்று. ஏனெனில், அவர்கள் போயுள்ள செய்தியை சுற்றத்தார் அறிந்தால் ஏதாவது, மாப்பிள்ளையை, தடை செய்து விடுவார்களோ என்கிற பயத்தால், நான் ஊரிலிருந்தால் கலியாணத்திற்காக வெளியூருக்குப் போயிருக்கிறார்களெனச் சந்தேகமிருக்காது என்கிற எண்ணங்கொண்டேயாகும். இக் கலியாணத்தின் பலனாக இரு மூன்று வருடகாலம் பந்துக்களுக்குள் வேற்றுமையும் பிளவும் ஏற்பட்டு ஜாதிக் கட்டுப்பாடு இருந்து பிறகு அனைத்தும் சரிப்பட்டுப் போயின.

பெண்ணும் மாப்பிள்ளையும் ஒத்து வாழ்ந்து ஓர் ஆண் மகவைப் பெற்றனர். ஆனால் துர்அதிர்ஷ்டவசமாக கொஞ்சகாலையில் அந்த இரண்டாவது புருஷனும் இறந்துவிட்டான். இப்பொழுது தாயும் மகனுமே க்ஷேமமாயிருக்கிறார்கள். இன்னமும் எனது வகுப்பில் 13 வயதுக்குக் கீழ்பட்ட விதவைக் குழந்தைகள் சிலர் இருக்கின்றனர். பாவம், அக்குழந்தைகளை அவர்களின் பெற்றோர்கள் தீண்டாதார்போல் கருதி நடத்துவதை தினமும் பார்க்கபாவமாயிருக்கிறது.

எவ்வளவோ இடருக்குள்ளாகப்பட்டு அக் கலியாணத்தை முடித்து வைத்தோம். ஆனால் கடைசியில் அந்த இரண்டாவது கணவனும் மரிக்கவே விதவாவிவாக விஷயத்தில் தீவிரமாகத் தலையிடவேண்டுமென எனக்கிருந்த கருத்துக்கு பெரிய முட்டுக்கட்டை போட்டதுபோலாயிற்று.

விதவைகளின் விஷயம் நினைவிற்கு வரும்போதும் நேரில் காண நேரும்போதும், உலக இயற்கை எளியாரை வலியார் அடக்கி ஆண்டு துன்புறுத்துவதல்லாமல் வேறல்ல வென்றே முடிவு செய்வேன். மேலும் ஹிந்து சமுகம் எந்தக்காலத்தில் எவருடைய ஆதிக்கத்தில் கட்டப்பட்டதோ, அன்றி மதமில்லாமல் முறையில்லாமலிருந்து இயற்கையாகவே ஏதாவது கட்டுப்பாடுகள் ஏற்பட்டு அவற்றை வலியவர்கள் தங்கள் தங்கள் சுயநலத்திற்குத் தக்கபடி திருப்பிக் கொண்டார்களோ என நினைக்கும்படி இருந்தாலும் பொதுவாய் விதவைத் தன்மை நிலைத்திருக்கும் காரணத்தினாலேயே ஹிந்து மதமும் ஹிந்து சமுகமும் ஒரு காலத்தில் அடியோடு அழிந்து போனாலும் போகுமென்பதே எனது முடிவான கருத்து.

அரசியல் என்றும் சமுகவியல் என்றும் ஜனசமூக சீர்திருத்தவியல் என்றும் பெண் மக்கள் முன்னேற்றமென்றும் சொல்லிக் கொண்டிருக்கும் மக்களில் பெரும்பான்மையோர், இவற்றைத் தங்களது வாழ்வுக்கும் கீர்த்திக்கும் சுயநலத்திற்கும் உபயோகப்படுத்திக் கொள்ளுவோராக இருக்கிறார்களே தவிர, உண்மையில் அக்கருத்துக் கொண்டு உழைப்பவர்கள் அரிதிலும் அரிதாகிவிட்டனர் என்று சொல்லுவதை மன்னிக்க வேண்டுகிறேன். அன்றியும் இவ்விதத் துறைகளிலும் சீர்திருத்தங்களிலும் பாடுபடுபவர்களாய்க் காணப்படுவோரில் பெரும்பாலோர் தாங்கள் செய்வது சரியென்ற தீர்மானம் தங்களுக்கேயல்லாமல் உலக மெப்புக்கு செய்கிறவர்களாகவே இருக்கிறார்கள். பெண்மக்கள் முன்னேற்றத்தைப்பற்றி பேசுவோர் தங்கள் வீட்டுப் பெண்களைப் படுதாவுக்குள் வைத்துக்கொண்டும், விதவா விவாகத்தைப் பற்றி பேசுவோர் தங்கள் குடும்பங்களில் உள்ள விதவைகளை காவல் போட்டு விதவைத் தன்மையைக் காப்பாற்றிக் கொண்டும் இருக்கிறார்களே தவிர உண்மையில் ஒரு சிறிதும் தாங்கள் நடவடிக்கையில் காட்டுவதில்லை. இதன் காரணம் என்னவெனப்பார்க்கும் போது, பெண்மக்கள் என்று நினைக்கும் போதே அவர்கள் அடிமை, நமக்கடங்கினவர்கள், கட்டுப்படுத்தி வைக்கப் படவேண்டியவர்கள் என்கிற உணர்ச்சி ஏற்படுகிறது என்றே நினைக்கிறேன். இதனாலேயே அவர்களை விலங்குகளைப் போல் நடத்திவருகிறார்கள். அவர்களுக்கு சுதந்திரங்கொடுப்பது என்கிற விஷயத்தை நினைக்கும்போது செய்யக்கூடாத ஒரு பெரிய குற்றமான செய்கையைச் செய்ய நினைக்கிறது போலவே தோன்றுகிறது. அதனால் மனித சமூகத்தில் சரிபாதியான எண்ணிக்கைக்கு பிறவியிலேயே சுதந்திரம் இல்லை என்பது தானே இதன் பொருள்? ஆடவருக்கு பெண்டிரைவிட சிறிது வலிமை அதிகமாக ஏற்பட்ட குற்றந்தானே இம்மாதிரி ஒரு சரிசமமான சமூகத்தை சுதந்திரமில்லாமல் அடிமைப் படுத்தும் கொடுமையை அனுஷ்டிக்க வேண்டியதாயிற்று. இந்த தத்துவமே வரிசைக்கிரமமாக மேலோங்கி எளியோரை வலியோரால் அடிமையாக்கச் செய்கிறது.

உலகில் மனித வர்க்கத்திற்கு அடிமைத் தத்துவம் ஒழிய வேண்டுமானால் பெண்ணுலகை அடிமையாகக் கருதி நடத்தும் அகம்பாவமும் கொடுமையும் ஒழிய வேண்டும். இது ஒழிந்த நிலையே சமத்துவம் சுதந்திரம் என்னும் மூலை முளைக்கும் இடம்.

உலகிலேயே மிகப்பெரிய சீர்திருத்தக்காரரான மகாத்மா காந்தியடிகள் இந்து விதவைகளைப்பற்றி அநேகசந்தர்ப்பங்களில் பேசியும் எழுதியும் வந்திருக்கிறார். அவற்றுள் சென்ற ஆண்டு "நவஜீவன்" பத்திரிகையில் மகாத்மா எழுதியிருக்கும் விஷயத்தைக் கவனித்தால் விதவைகளின் விடுதலை சம்பந்தமாய் மகாத்மா எவ்வளவு தூரம் உழைக்கிறார் என்பது புலனாகும். அக்கட்டுரையின் ஒரு சில பாகமாவது:—

"பால்ய விதவைகளைக் கட்டாயப்படுத்தி வைத்திருப்பது போன்று இயற்கைக்கு விரோதமான பொருள் உலகில் வேறொன்றும் இல்லையென்பது எனது திடமான நம்பிக்கை. விதவைத்தன்மை என்பது எவ்விதத்திலும் ஒரு தர்மமாகா. பலாத்காரத்தினால் அநுஷ்டிக்கச் செய்யும் எவ்விதச் செயலும் அறமாகாது. பலாத்காரத்தினால் நடத்தும் விதவை வாழ்வு பாவமானது. பதினைந்து வயதுள்ள ஒரு 'பால்ய விதவை தானாகவே விதவை வாழ்வைக் கொண்டிருக்கிறாள் என்று சொல்லுவது, அவ்விதமாகச் சொல்லுவோரின் கொடூரச் சுபாவத்தையும் அறியாமையையுமே விளக்குகிறது,"

என்று எழுதிவிட்டு, விதவைகள் மறுமணம் செய்து கொள்ள வேண்டுமென்பதாக தன் உள்ளன்போடும் ஆவேசக் கிளர்ச்சியோடும் மகாத்மா கூறிய மணிவாசகங்களில் ஒரு சிலவற்றைக் கவனிப்போம்,

"......அமைதியுடன் தங்களுடைய துக்கத்தைச் சகித்துக் கொண்டு தங்களுடைய உண்மையான கருத்தைத் தங்களின் பெற்றோர் அல்லது போஷகர்களான ஸ்திரீ புருஷர்களிடம் தைரியமாய்ச் சொல்லிவிட வேண்டும். அவர்கள் அதை கவனிக்காவிட்டால் தாங்களே, ஒருயோக்கியமான புருஷன் கிடைத்தால் உடனே விவாகம் செய்து கொள்ளட்டும். அது வரையில் யோக்கியமான புருஷனை அடைய தமயந்தி சாவித்திரி முதலியவர்கள் போல் தவம் செய்வதே ஏற்றவழியாகும்......விதவைகளின் போஷகர்கள் இவற்றைச் சரிவரக் கவனியாவிடின்

[இதன் தொடர்ச்சியை 6-ம் பக்கம் பார்க்க.]

பெரம்பலூர் தாலூகா முதலாவது பார்க்கவர் குல மகாநாடு.

பெரம்புலூர் தாலூகாவில் வசிக்கும் தெய்வீக இராஜபரம்பரையைச் சார்ந்த பார்க்கவ மக்கள் முன்னேற்றங்கருதி ஓர் மகாநாடு நிகழும் அக்ஷய ஆண்டு ஆவணித்திங்கள் 12, 13 (28, 29-8-26) சனி ஞாயிறு ஆகிய கிழமைகளில் பெரம்பலூருக் கணித்தாயுள்ள வேப்பந்தட்டை என்னும் கிராமத்தில் புதிதாயமைக்கப் பெற்றிருக்கும் கொட்டகையில் நடைபெறும். அதுபோது மாரண்ட ஹள்ளி மிட்டாதார் பார்க்கவ பந்து திருவாளர் மா. ர. வெங்கடாசல உடையார் அவர்கள் அக்கிராசனம் அமர்ந்தருளுவார்கள். இரண்டு நாட்களிலும் பின்கண்ட நிகழ்ச்சிப்படி அரிய சொற்பொருக்குகள் பல வித்வ மணிகளால் நிகழ்த்தப் பெறும். ஸ்ரீமான்களான R. கந்தசாமி மூப்பனூர், T. S. ராம பத்ர உடையார், அ. சாமிநாத உடையார், சா. முத்துக்குமார உடையார், S. R. ஜராவத உடையார் ஆகிய குல தலைவர்களும் விஜயம் செய்து கூட்டத்தைச் சிறப்பிப்பரென்றெதிர்பார்க்கப்படுகிறது.

நிகழ்ச்சிக் குறிப்பு.

(28-8-26) சனிக்கிழமை.

தேவாரம், கடவுள் வாழ்த்து, வரவேற்புப் பத்திரம், அக்கிராசனப் பிரசங்கம்.

11—12 மணி, "நம் நிலை" திருவாளர் ம. ரா. குமாரசாமி உடையார் அவர்கள், திருக்கோவலூர்.

2—4 மணி. "கதர்" திருவாளர் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அவர்கள் ஈரோடு.

4—5 மணி. "சமூக முன்னேற்றம்" திருவாளர் சாமி சிதம்பர உடையார் அவர்கள் அரசர்மடம்.

5—6 மணி. "கல்வி" திருவாளர் T K. சாமிநாத உடையார் அவர்கள், புஜங்கராயநல்லூர்.

(29—8—26) ஞாயிற்றுக்கிழமை.

9—10 மணி. "கடமை" திருவாளர் ஈ. வெ. ரா. நாயக்கர்.

10—12 மணி. "காந்தியம்" திருவாளர் ம. ரா. குமாரசாமியார்.

2—3 மணி. "வருங்காலவேலை" திருவாளர் மே. வே. துரைசாமி உடையார் அவர்கள், மேற்கற்கண்டார்கோட்டை.

3—6 மணி தீர்மானங்கள்.

முடிப்புரை

வந்தன வழிபாடுகள் சந்தனதாம்பூலம் வழங்குதல் நடைபெறும்.

பாபவிநாச சுவாமி கோவிலும் சங்கராச்சாரியாரும்.

சிருங்ககிரி சங்கராசாரி யென்பவர் இங்கு வந்து, இரண்டு வாரமாகிறது. அவர் தெற்கு பாடவீதி தேவர் சத்திரத்தில் தங்கி வருகிறார். அச்சத்திரத்தின் முன்பாக உள்ள சுவாமி யெழுந்தருளும் வீதியை திருமதிலோடு சேர்த்து அடைக்கப்பட்டு ஜனங்கள் பிரகாரம் வருவதைத் தடுத்திருப்பதை மாத்திரமன்றி ஆடி அமாவாசை யன்று சுவாமி இடபவாகன ஆரூடராக வெளிவர வேண்டியதற்கும் இடங்கொடாமல் தடுக்கப்பட்டுப் போனமையால் ஆடி அமாவாசையன்று சுவாமி வீதியில் எழுந்தருளவேயில்லை. இந்தப் பாப விநாசஸ்தலத்தில் ஆடி அமாவாசை மிகவும் முக்கியமானதென்பது உலகப் பிரசித்தமானதால் இந்த ஜில்லாவையே யன்றி இதர ஜில்லாக்களிலிருந்தும் அநேக ஆயிரக்கணக்கான ஜனங்கள் தீர்த்த ஸ்நானத்திற்கும் சுவாமி தெரிசனத்திற்குமாக வருவது வழக்கம். அவ்வழக்கப்படியே இவ்வருஷமும் ஆடி அமாவாசைக்காக பல்லாயிரக்கணக்காக வந்த ஜனங்களுக்கு ரிஷபவாகனக் காட்சி கிடையாமற் போனது மிகவும் பரிதபிக்கத்தக்கதே. உலகத்துக்கு நன்னெறி காட்டவந்த சங்கராசாரியார் இது விஷயத்தில் நடந்துகொள்ள வேண்டிய தமது கடமை இன்னதென்பதை மறந்தொழிந்தார் போலும். இது தானா? இன்னும் பரிதபிக்கக்கூடிய விஷயங்கள் பல உள. ஆலயங்களில் நடக்க வேண்டிய நித்திய நைமித்திய கருமங்களில் யாதாயினும் ஒன்று எக்காரணத்தாலாயினும் தடைபுற்று நின்றுவிடுமானால் அந்தத் தோஷபரிகாரத்தின் பொருட்டு பிராயச்சித்த கர்மத்தை நடத்தினாலன்றி கோயில் பூஜை முதலியன நடத்தலாகா தென்பது சிவ ஆகமகாரியா காண்டங்களிலும் சிவாலய பத்திகளிலும் முறையிடுகின்றதேயாயினுங் கவனித்து முற்கூறியவாறு பிராயச்சித்த கர்மத்தை கோயில் அதிகாரிகளாவது நடத்தியிருக்க வேண்டியது அவசியம், அதைத அவர்கள் சிறிதும் கவனித்ததாகத் தெரியவில்லை. அந்தோ! பெருங் கொடும்பாவம்! சிவ அபராதத்தை சங்கராச்சாரியார் ஏற்பாரா, அல்லது கோயில் அதிகாரிகள் ஏற்பார்களா, யார் ஏற்பார்களோ அறியோம்.

உண்மை உரைப்போன்.

சித்தவைத்திய 3-வது மகாநாடு கண்காக்ஷி.

1. 1926-ஹு ஆகஸ்டு-மீ 1-உ ஞாயிற்றுக் கிழமை காலை 7-மணிக்கு கோவில்பட்டியில் திரு. கே. எ. சொக்கலிங்கம் பிள்ளை அவர்கள் தலைமையின் கீழ் ஒரு சிறப்புக் கூட்டம் நடை பெற்று அடியிற்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

2. திரிசிரபுரத்தில் 24-4-1926-தேதியில் கூடிய சிறப்புக்கூட்டத்தில் மூன்றாவது மகா நாடு கண்காட்சிகள் 1926-ஹு ஆகஸ்டு-மீ த்தில் நடத்தப்பட வேண்டும் என்று தீர்மானமாயிருந்தது.

3. மூன்றாவது மகா நாட்டின் சித்த வைத்தியர்கள் எழுதிய அரங்கேற்ற வேண்டுமென்று குறித்த

(1) சித்தவைத்திய நூல்.
(2) நோய் முதல் நுணமருந்து நூல்.
(3) மருந்து செய் முறை நூல்.

என்ற நூல்கள் பல வைத்தியர்கள் எழுதத் தொடங்கி முடிவு பெறாதிருப்பதால் அவை முடிவு பெறும் பொருட்டு முன்வாய்தாவை மாற்றி இவ்வருடம் அக்டோபர் மாதம் தமிழ்க்கடைச் சங்கம் வீற்றிருந்த மதுரையில் நடத்த வேண்டுமென்று மதுரை சித்தவைத்திய சங்கத்தார் வேண்டியபடி நடத்துவதாக தீர்மானிக்கப்பட்டது. மகாநாடு மதுரையில் அக்டோபர் மாதத்தில் நடை பெறும். தேதி பின்னால் தீர்மானித்து வெளியிடப்படும்.

4. அக்டோபர் மாதம் நடக்கும் மூன்றாவது தமிழ் வைத்திய சங்க மகாநாட்டில் தமிழ் வைத்திய சங்க உறுப்பினர் ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்கு கைவந்த அனுபவ மருந்து முறைகளை விபரமாய் எழுதி அவைகளை உபயோகிக்கும் வகையும் அவைகள் எத்தனை பேருக்கு எவ்வெவ்வமயங்களில் பயன்பட்டன என்பதையும் எழுதி மகாநாடு கூடும் தேதிக்கு 15 நாளைக்கு முன்னதாக சங்க அமைச்சருக்கு அனுப்ப வேண்டும். அவற்றை நூலாராய்ச்சிக் கழகத்தவர் ஆராய்ந்து தொகுத்து அவர்கள் பெயர் வரலாற்றுடன் சங்கச் செலவில் பதிப்பித்து வெளியிடப்படும்.

தங்க மெடல்களும், அநேக நற்சாக்ஷி பத்திரங்களும் பெற்ற
ராஜவைத்ய ஆஸ்ரமம்,
சரஸ்வதி விலாசம் பிரஸுக்கு எதிரில்
செவ்வாய்ப்பேட்டை, சேலம்.
மேகரணங்கள், வெள்ளைவியாதி, ராஜப்பிளவை, கட்டிகள்,
நீடித்த மூல பவுத்திர வியாதிகளை ஆபரேஷன் இல்லாமல்
சௌக்கியம் செய்யப்படும், விபரத்திற்கு எழுதுங்கள்:
ஆயிரக்கணக்கான வியாதியஸ்தர்கள்
சௌக்கியமடைந்திருக்கிறார்கள்.

தேவை.

தமிழில் சொல்வதையும் பிரசங்கிப்பதையும் சுருக்கெழுத்தில் (Short Hand) எடுத்து எழுதக்கூடிய ஒரு தமிழ் சுருக்கெழுத்துக்காரர் தேவை. அவருக்கு ஆங்கிலமும் தெரிந்திருக்க வேண்டுமென்பது அவசியமில்லை. தமிழ் சுருக்கெழுத்து எழுதுவதில் கெட்டிக்காரராயும் வாலிபராயுமிருத்தல் வேண்டும். சம்பளத்தைப்பற்றிக் கடித மூலமாய்த் தெரியப்படுத்திக் கொள்ளலாம்.

காரியஸ்தர், "குடி அரசு" ஈரோடு.

பிரமேகருல சம்ஹாரி.

சகல வெள்ளை, வெட்டை, தடிப்பு, ரணம் மேக நோய் 21-ம் 5-தினத்தில் தீர்க்கிறது. புட்டி ரூ. 2.

மதன கோலாகல ரசமணி மாத்திரை

இரவில் ஒரு மாத்திரை சாப்பிட்ட அரை மணி நேரத்தில் சிங்க வீரியம்போல் தாதுபுஷ்டியுண்டாக்கும். குளிகை 100-ரூ. 8. 50-ரூ- 4. 25-2.

வி. பி. சார்ஜ் வேறு. கேட்லாக் இனாம்.

ஸ்ரீராமபிரான் வைத்தியசாலை,
திருச்செங்கோடு. (தென் இந்தியா)

(4-ம் பக்கத் தொடர்ச்சி.)

யம். பார்ப்பனர்களை தங்கள் நன்மைக்கும் பார்ப்பனரல்லாதாரை ஒழிப்பதற்கும் நம்மை உபயோகப்படுத்திக் கொண்டார்களென்பதையும் இவர்களால் என்றைக்கும் நமது நாட்டிற்கு சுயராஜ்யம் வராதென்பதையும் நன்றாய் நான் அறிந்து கொண்டேன். சுயராஜ்யத்தைவிட சுயமரியாதைதான் இப்போது எனக்குப் பெரிதாயிருக்கிறது. நமது சமுகத்திற்கு "சூத்திரன்" என்கிற பெயர் இனி அரை நாழிகையும் இருக்கக்கூடாது. நம்மை அடிமை என்றும் வைப்பாட்டி மகன் என்றும் சண்டையில் ஜெயித்த கைதிகளென்றும் பொருள்கள் கொண்ட "சூத்திரன்" என்கிற பெயரால் அழைப்பதை எப்படிப் பொறுத்துக் கொண்டிருக்கலாம். ஆதலால் சுயமதிப்பையே பிரதானமாகக் கருதுவது ஒருக்காலும் குற்றமாகாது. இம்மாதிரி ஒரு வகுப்பாரை ஒரு வகுப்பார் கொடுமைப் படுத்தியும் தாழ்மைப் படுத்தியும் தீண்டாதாராக்கியும் நடத்திக் கொண்டிருப்பதைவிட மனதில்லாதிருக்கும்போது அந்த தேசம் எப்படி சுயராஜ்யம் அடைய முடியும்?

யார் சம்மதிக்கிறார்கள்?

இவ்விதம் தங்கள் சுயமரியாதையைப் பெறமுடியாத ஜனங்கள் எப்படி சுயராஜ்யம் பெற தகுதி யுடையவர்களாவார்கள்? வெள்ளைக்காரர்கள் நம்மைப் பார்த்து உங்கள் ராஜ்யத்தை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள், நாங்கள் போகிறோம் என்று சொன்னால் ஏற்றுக் கொள்ளுவதற்கு இந்தியராகிய நம்மில் யார் தயாராயிருக்கிறோம் யார் ஏற்றுக்கொள்வதை யார் சம்மதிக்கத் தயாராயிருக்கிறார்கள்? இந்துக்கள் வசம் ஒப்படைத்தால் முஸ்லிம்கள் சம்மதிப்பார்களா? இந்து முஸ்லிம் இருவர்களும் சம்மதித்தால் கிறிஸ்தவர்கள் சம்மதிப்பார்களா? இந்து முஸ்லிம் கிறிஸ்தவர்கள் மூவரும் சம்மதித்தாலும் தீண்டக்கூடாது, தொடக்கூடாது, தெருவில் நடக்கக்கூடாது என்று கொடுமைப் படுத்தி வைத்திருக்கும் பஞ்சமர்கள் என்று சொல்லும் சகோதரர்கள் சம்மதிப்பார்களா? முதலாவது இந்துக்களிலேயே யார் ஏற்றுக்கொள்வதை யார் சம்மதிக்கப் போகிறார்கள்? (பனகால் அரசர் ஏற்றுக்கொள்வதை நானும் நீங்களும் சம்மதிப்போம் என்கிற குரல்) நானும் நீங்களும் சம்மதித்தால் போதுமா? மயிலாப்பூர் அய்யங்கார் அய்யர் சம்மதிப்பார்களா? அல்லது பார்ப்பனர்கள் ஏற்றுக் கொள்வதை நாம் சம்மதிப்போமா? ஆகையால் இதுசமயம் ஒற்றுமைக்கு நம்பிக்கைக்கும் சுயமரியாதைக்கும் பாடுபடுவதை விட்டுவிட்டு சுயராஜ்யத்தைப் பற்றிப் பேசுவது வீண்பேச்சே யாகும். (தொடரும்.)

நாடார் மஹாஜன சங்கம், மதுரை.

12-9-26-ல் பிரைஸ் எடுப்பதற் குரிய வழியில் நடவடிக்கைகள் வெகு வேகமாய் நடந்து கொண்டிருக்கின்றன. பிரைஸ் எடுக்கப்பெறும் கீழப்பேட்டை ஹாலில் சிங்காரக்கொட்டகை அமைக்கப் பெறுகிறது. எவ்வித மாறுதலுமின்றி அன்று பிரைஸ் எடுக்கப்படும். விற்ற-விற்க முடியாத டிக்கட்டுகளை 30—8—26-க்குள் அனுப்பகோருகிறோம். காரியதரிசிகள்.

சேலம் ஜில்லா சபை சத்திரங்களில் ஜாதிவேற்றுமை விலக்கப்பட்டது.

ஜாதி வித்தியாசம் என்ற பேய் நம்தென்னாட்டில் தலை நீட்டாத இடமே இல்லாதிருந்தது, ரயிலுக்கு போனால், அங்கு எவ்விடம் பார்த்தாலும் ஐரோப்பியர்கள் இந்தியர்கள் என்ற வித்தியாசமும், அதை விட்டு அடுத்தபடியாக காப்பி ஹோட்டல்களுக்கு வந்தால் அவ்விடமும் "பிராமணர்கள் மாத்திரம்" என்றும் அதையும் விட்டு பொது சத்திரங்களில் நுழைந்தால் அங்கும் "பிராமணர்கள் மாத்திரம்" என்றும் இருந்து வந்தது. ரயிலும் காப்பி கிளப்பும், முறையே ஆங்கிலேயர்களுக்கும் பார்ப்பனர்களுக்கும் சொந்தமாதலால், அவர்களுடைய இடத்தில் அவர்கள் வைத்தது சட்டமெனலாம். மற்றவர்களுக்கு அந்த ரோஷமிருந்தால் அவ்விடத்திற்கு போகாமலிருந்து விடுவதைத் தவிர்த்து வேறு வழியில்லை. ஆனால் சத்திரங்களில் பார்ப்பனரல்லாதாருடைய பணத்தில் கட்டி அவர்களுடைய பணத்தினாலேயே ஆதரிக்கப்பட்டுவரும் சத்திரங்களிலோ இக்கொடிய அக்கிரமங்கள் நிலைத்திருப்பது எவ்வாறு பொருந்தும். நம் சொந்த வீட்டில் திருட்டுத்தனமாய் நுழைந்த திருடன் எவ்வளவு நேரம் மறைவாய் இருக்க முடியும். எப்போதேனும் ஒரு சமயம் திருடன் கண்டு பிடிக்கப்பட்டு துரத்தப் படுவான் அன்றோ?

சேலம் ஜில்லா சபை சத்திரங்களில் நெடுநாட்களாக மறைந்திருந்த பிராமணிய திருடன் சமீபத்தில் நடைபெற்ற சேலம் ஜில்லா போர்டு கூட்டத்தில் கண்டு பிடிக்கப்பட்டு உடனே அப்புறப்படுத்தப்பட்டதை அறிந்த நம்மவர்கள் சந்தோஷிக்காதிருக்க முடியுமோ? நெடுநாட்களாக மறைந்து நம்மவர்களுக்கு இடையூறாயிருந்த சேலம் ஜில்லா பிராமணிய திருடனை பிடித்து வெளியே துரத்திய கீர்த்தி, ஸ்ரீமான்கள் வைத்தங்கரை குப்புசாமி செட்டியார், சேலம் A. வையாபுரி பண்டாரம் இவர்களுக்குத் தான் உண்டு. பார்ப்பனரல்லாதாருடைய நன்றியறிதலை அவர்களுடைய சார்பில் இக கனவான்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். வை. நடேசன்.

தமிழர்களே!

பிராமணியம் பொல்லாதது. இது தமிழர்களைக் கொண்டு பார்ப்பனர்கள் பிழைக்க ஏற்படுத்திக் கொண்ட முறை. இதை ஒழிக்க முயலுக. நாட்டைவிட்டு ஓட்டுக.

ஸ்ரீவில்லிபுத்தூர்

பி. பி. அன்ஸன்

பிஸ்கட் பாக்டரி.

குழந்தைகளுக்குத்தகுந்த ஆகாரம்

அரரூட் பிஸ்கட்.

சிற்றுண்டிக்கு முதன்மை பெற்றது

சூஸ்பரி பிஸ்கட்.

புஷ்டியைக் கொடுக்கக் கூடியது

பழம் கேக்.

எல்லா முக்கிய இடங்களிலும் கிடைக்கும்.

P. P. & SON,
Cake & Biscuit Factory,
SRIVILLIPUTTUR.

ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்களும் தங்க மெடல்களும் பரிசுபெற்றது.

உலகப் பிரசித்திபெற்ற

மஹா சந்ததி தைலம்.

இந்த தைலமானது மூளைக்கும், கண்களுக்கும் குளிர்ச்சியைத் தரக்கூடிய அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது.

இத் தைலத்தை வாரம் இருமுறை ஸ்நானம் செய்து வந்தால் கை, கால், கண் எரிச்சல், கண்ணில் நீர் வடிதல், கண் சிகப்பு, நித்திரையின்மை, தலைநோய் மண்டைக்குத்து, மூளைக்கொதிப்பு, காதில் வலி, சீழ் வருதல், பீனிசம் முதலிய பலவித நோய்களையும் குணப்படுத்தக்கூடியது.

இத்தைலத்தை உபயோகித்த கனவான்கள் புகழ்ந்து எழுதும் கடிதங்கள் நாள் தோறும் வந்துகொண்டே யிருக்கின்றன. இத்தைலத்தை மேல்சொன்ன நோயுள்ளவர்களும், யாதொரு நோயுமில்லாத ஆண், பெண் யாவரும் உபயோகிக்கலாம். ஒருமுறை பரிக்ஷித்துப் பார்த்தால் உண்மை விளங்கும். பத்தியமில்லை.

24 அவுன்ஸ். பாட்டல் ரூ. 4-0-0. 12 அவுன்ஸ். பாட்டல் ரூ. 2-2-0. வி. பி. செலவு வேறு.

சாலாமிசிரி லேகியம்.

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

இந்த லேகியத்தை சில நாள் சாப்பிட்டு வந்தால் குறைவுள்ள ஆண்தன்மையை மிகுதிபடுத்துவதுடன், கைகால் அசதி, இடுப்புவலி, பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, சொற்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் உண்டாகும் துரித ஸ்கலிதம் முதலிய கொடிய வியாதிகளை நீக்கி, ராஜகருவிகளுக்கு வலுவைக் கொடுத்து, தளர்ந்த நரம்புகளைக் கெட்டிப்படுத்தி, இரத்தத்தையும், வீரியத்தையும் விருத்தி செய்து நல்ல திடகாத்திர சரீரத்தை உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0 வி. பி. தபாற் செலவு ரூ. 0—8—0

விலாசம் தெரிவிப்பவர்களுக்கு பலவிதமான மருந்துகள் விபரம் அடங்கிய கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

டி. சி. சிங்காரம் அண் கோ.,
சித்த ஆயுர்வேத வைத்தியசாலை, தெப்பக்குளம் போஸ்டு திருச்சி.

லால்குடி தாலூக்கா சிறுகளப்பூர் 2-வது பார்க்கவகுல மகாநாடு.

லால்குடி தாலூக்கா சிறுகளப்பூர் கிராம பார்க்கவகுல சங்கக் காரியதரிசிகளான ஸ்ரீமான்கள் பி. பெரியசாமி நயினர், எம். ராமசாமி உடையார் ஆகியவர்கள் எழுதுவதாவது:—

லா-தா சிறுகளப்பூர் கிராமத்தில் ஆடி-மீ 10-ம் உ (25—7—26) ஞாயிற்றுக் கிழமை மாலை சுமார் 7-மணிக்கு மகாநாடு கூடியது. அதற்கு வெளியூர் பிரதிநிதிகளாக ஸ்ரீமான்களான கானக்கிளியனூர் வீரமஹேசுரம், பி. கல்யாண வீரய்யர் சி. செல்ல முத்து மூப்பனர், ஆ. செல்ல முத்து மூப்பனர், க.கந்தசாமி மூப்பனர், உ.தா. செம்பியகுடி மூக்கப்பஉடையார், பெ.தா.குளத்தூர் எம். கருப்பண்ண உடையார், பொ சின்னசாமி உடையார், கெஞ்சேரி ஆ. முத்துசாமி உடையார், சிதம்பரத்துடையார், களுமங்கலம் பொன்னுச்சாமி நயினர். ஆகிய பிரமுகர்களும் கிராம வாசிகளும் விஜயம் செய்தது குறிப்பிடத் தக்கது.

சுமார் 7-மணிக்கு திருவாளர் ராமசாமி நயினரால் கடவுள் வாழ்த்துப் பாடி முடிந்தவுடன் ஸ்ரீமான் எம். ராமசாமி உடையார் அவர்கள் தலைவர்களையும் பிரதிநிதிகளையும் வரவேற்று ஓர் உபந்யாசம் புரிந்தார்கள். ஸ்ரீமான் பி. பெரியசாமி நயினர் அவர்கள், கானக்கிளியனூர் வீரமாஹேசுரம், பி. கல்யாண வீரய்யர் அவர்களை அக்கிராசன ஸ்தானத்துக்கு பிரேரித்து முடிந்தவுடன் சபையோர்களின் ஏகமனதான கரகோஷங்களுக்கிடையே அக்கிராசனர் தமது பீடத்தமர்ந்து பார்க்கவர்கள் செய்யவேண்டிய வேலையைக் குறித்தும் சங்கத்தின் சீர்திருத்தத்தைப் பற்றியும் ஈஸ்வர பக்தி, கல்வி எனபதைக் குறித்தும் நீண்ட நேரம் ஓர் இனிய சொற்பொழிவு நிகழ்த்தினர். பின்னர் ஸ்ரீமான் எஸ். செல்லையா உடையார் அவர்கள் பார்க்கவர் பிறப்பு வளர்ப்பு முதலியன பற்றி பேசினர்கள். ஸ்ரீமான் பெரியசாமி நயினர் அவர்கள் தற்காலம் கும்பகோணத்தில் நடந்த 12-வது பார்க்கவகுல மகாநாட்டிற்கு முன் நடந்த 11 மகாநாட்டின் தீர்மானத்தைப் பற்றிய விபரத்தைக் குறித்தும் கல்வி கற்க வேண்டியதவசியமென்பதைப் பற்றியும் புலாலுண்ணுமையைப் பற்றியும் நீண்ட நேரம் உபந்யாசம் புரிந்தனர்.

இவ்வாண்டு கும்பகோணம் பார்க்கவகுல 12-வது மகாநாட்டின் தீர்மானத்தின்படி பார்க்கவ சங்க நிதிக்கு விசேஷ காரியங்களில் ஒரு ரூபாய் முதல் தத்தம் சக்திக்கு ஏற்றவாறு காணிக்கை செலுத்தவேண்டுமென்ற திட்டத்தின் படிக்கு ஐவரிடமிருந்து ரூ. 5 வசூலாகியிருக்கின்றன. ஷை நிதிக்கு இன்னும் சரியான பொறுப்பு வாய்ந்த அங்கத்தினர்கள் ஏற்பட்டு அமுலுக்கு வாராததினால் ஷை ரூபாய் ஐந்தும் சங்கத்தின் காரியதரிசிகளிடமே இருக்க வேண்டுமென்றும், பார்க்கவகுலப் பிரதிநிதிகள் யாவரும் இவ்விஷயத்தில் சிரத்தை எடுத்து இத்திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதுடன் இம்மாதிரி செய்கையில் தக்க மிக்க ஊக்கம் பாராட்டுவார்களாகில் நம் பார்க்கவ சமூகம் முன்னேற்றமடைய மிக்க ஹேதுவாயிருக்குமென்று திருவாளர் எம். ராமசாமி உடையார் சொல்லி முடித்தார்.

இறுதியில் அக்கிராசனர் ஒற்றுமை, நாகரீகம் சங்கம், சேரும் நோக்கம், கல்வி அவசியம் இருபாலருக்கும் வேண்டியது, சிக்கனச்செலவு முதலிய பொருள்பற்றி செறிவு தெளிவு முதலிய குணங்களுடன் பேசியது பெரிதும் போற்றுதற்குரியது. பிறகு வாழ்த்துப்பாடி சுமார் 10-மணிக்கு கூட்டம் இனிது நிறைவெய்தியது.

"ஆனந்த விகடன்"

இதில் பல அருமையானதும் விடாநகைப்பைத் தருவதுமான விகடங்களும் விகடத்தேவாரம், திருவாசகம், திருப்புகழ் முதலிய அநேகப் பாடல்களும், விகடக் கதைகளும், ஞானர்தரும் வியாசங்களும், பலவகை குறிப்புகளும், "முத்தாம்பாள் அல்லது மோகனவடிவு" என்னும் தொடர்ப்பு நாவலும், பஞ்சாங்கமும் அடங்கியுள்ளது. இதை ஒரு தரம் வாசித்தவர்கள் மறுபடியும் வாசிக்காதிருக்கமாட்டார்கள்.

வருடச் சந்தா ரூ. 2, வெளிநாட்டிற்கு ரூ, 2-8-0

1 அணு ஸ்டாம்பு அனுப்ப மாதிரி இனும்.

[மாத சஞ்சிகை] ஆனந்த விகடன் ஆபீஸ், செவகார்பேட் போஸ்ட், ஜி. டி. மதரூஸ்.

தமிழ் மக்களே! திருச்சி "தமிழர்" பத்திரிகையும், சென்னை "திராவிடன்" பத்திரிகையும் வாசியுங்கள்.

ஆனந்த குணபோதினி

ஒரு நூதன உயர்தர தமிழ் மாதப் பத்திரிகை

பிரசித்த அநுபவஞான சாஸ்திரி இதன் ஆசிரியராய் விளங்குகிறார்.

இத்தகைய நவீன ஸஞ்சிகை இதுவரை வெளிவந்ததில்லை. இது தமிழ் அறிந்த ஒவ்வொருவர் அகத்துள்ளும் புகுந்து நிலவும் உன்னதம் வாய்ந்தது. சித்திரப்படங்களுடன் திகழ்வது. கல்விச் செல்வம், பொட்செல்வம் பெருகி இன்பம் ஓங்குதற்குரிய வியாசங்களால் ஒளிர்வது. அறிவை விளக்கி உற்சாகத்தைக் கொடுப்பது. நன்னடக்கையும், லௌகீக யுக்தியும், பாஷை ஞானமும், தேசாபிமானமும், ஈசுவர பக்தியும், ஆழ்ந்த யோசனையையும் உண்டாக்கக் கூடியது. எல்லா மதஸ்தர்களுக்கும், எல்லா ஜாதியார்களுக்கும் ஏற்றதாய் நல்ல விஷயங்கள் இருக்கப் பெற்றது. சொல் நயம் மிகுந்து தமிழ் உலகமெல்லாம் ஜொலிக்கும் படியாயிருப்பது "ஆனந்த குணபோதனி"தான். ஆடவர், மகளிர், பெரியோர், சிறியோர், எவர் கையிலும் இப்பத்திரிகையை இனிக் காணலாம்.

இதில் "ஆனந்த தரிசனம்" "பழமொழிக் குறிப்புகள்" "பத்திரிகா சாரம்" "பெண்கள் பக்கம்" "பிரபஞ்ச தரிசனம்" "விகடப் பிரதாபன்" "சென்ற மாதம்" என்ற தலைப் பெயர்களின் கீழ்வரும் ஒவ்வொரு விஷயங்களும் சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய அலங்கார வசனமழையாய் விளங்கும். இப்பத்திரிகையே எவ்விஷயத்திலும் வெகு சிறந்ததென்பதை தங்களுடைய அநுபவத்தில் தாங்களே அறிந்து கொள்ளலாம். ஆனந்த குணபோதினியின் சொற்ப சந்தாவை உற்று நோக்குங்கள். வருஷச் சந்தா ரூபாய் ஒன்றே (ரூ-1) இன்றே எழுதுங்கள், உடனே சேருங்கள்.

தி இராஜகோபால் முதலியார்,
புரோப்ரைட்டர், "ஆனந்த குணபோதினி" ஆபீஸ்,
302, தங்கசாலைவீதி, சென்னை.

இந்தியர் கஷ்டநிவாரண பாங்கு "லிமிடெட்" கோயமுத்தூர்.

காப்பு திரவியம்	—ரூ.	2,706.
மூல திரவியம் —	ரூ.	5,00,000.
வெளிவிடப்பட்டது	—ரூ.	69,100,
வசூலிக்கப்பட்டது	—ரூ.	43,890.
டிபாசிட்டுகள்	ரூ.	62,580-1-0.

டிபாசிட்டுகள் அடியிற்கண்ட வட்டி வீதத்திற்கு பெற்றுக்கோள்ளப்படும்.

சேவிங்ஸ் பிக்சேட் டிபாசிட்டு
இரண்டு வருஷ, கெடுவு வட்டி.
100-க்கு மாதம் 1-க்கு ரூ. 0—10—0
வருஷம் 1-க்கு வட்டி ரூ. 7—8—0
இதற்கு பிரதி மாதமும் வட்டி கொடுக்கப்படும்.

பிக்சேட் டிபாசிட்டு.
ஒரு வருஷ கெடுவு, வட்டி.
100-க்கு மாதம் 1-க்கு ரூ. 0—9—0
வருஷம் 1-க்கு வட்டி ரூ. 6—12—0
இதற்கு வட்டி 6-மாதங்களுக்கொருமுறையாவதும் வருஷத்திற் கொருமுறையாவதும் கொடுக்கப்படும்.

ஷை பாங்கானது ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருஷ காலமாக ஒழுங்காக நடந்து வருகிறது. நாளது 10-2-26-உ வருஷாந்திரக் கூட்டமும் நடைபெற்றது. இப்பாங்கானது கோயமுத்தூரில் உள்ள இம்பீரியல் பாங்கை தவிர்த்து மற்ற பாங்குகளைப்போல் 100-க்கு நாள் 1-க்கு ஒரு அணுவும், அதற்கும் அதிகமாகவும், அதிகவட்டி வாங்காமலும், புதிய விதிகளுடனும் குறைந்த வட்டிக்கு (அதாவது 100-க்கு, 0—12—0. 1—0—0; ரூபாயிக்கு எவ்வகையிலும் அதிகப்படாமல் ஏழை ஜனங்களுக்கு அநேக சௌகர்யமாகவும் இருப்பதோடு, குறைந்த பங்குகளினுலேயும் மானேஜிங் டைரெக்டர், அவர்களுடைய திறமையினுலும், முயர்ச்சியினுலும், பங்குக்காரர்களுக்கு முதல் வயதிலேயே 100-க்கு ஒரு ரூபாய் வட்டி கொடுக்கப்பட்டிருப்பதுவும் தவிர ரிசர்வு பண்டு ரூபாய் 2,706 சேர்ந்திருக்கிறது. நாளதுவரை யாதொரு போக்குக்குத்தியில்லாமலும் இருப்பதிலிருந்து மானேஜிங் டைரெக்டருடைய தீர்க்காலோசனையும், பாங்கின் நல்ல ஸ்திதியையும் காட்டுகிறது. மேலும் அதிகமான பங்குகள் சேர்ந்து ஏராளமான லேவாதேவி நடந்தால் இப்போது கிடைத்த இலாபத்தைவிட அதிக இலாபம் கிடைக்குமென்றும், ஏழைகளுக்கும் பெரிய உபகாரமாக இருப்பதற்கும் கடவுள் கிருபை செய்வாராக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

குறிப்பு:—

இந்த பாங்குக்கு ஏற்பட்டிருக்கும் டைரக்டர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி சொந்த பாங்கு நடத்தக்கூடிய சக்தி வாய்ந்த பெரிய பெரிய தனவந்தர்களாகவும் அமையப்பெற்றிருப்பதால் யாவரும் தங்களிடமுள்ள திரவியத்தை டிபாவிட்டாகவும் பங்குத் தொகைக்காகவும் இப்பாங்குக்கு அனுப்பி உங்களுடைய பணத்திற்கு யாதொரு நஷ்டமின்றி வட்டியுடன் பெற்றுக்கொள்வதோடு, உங்களுடைய திரவிய சகாயத்தினுலும், ஏழைகளுக்கும் சகாயம் செய்த பாக்கியமும் அடைவீர்கள் என்பதற்கு யாதொரு தடையுமில்லை.

ஜி.ராமச்சந்திர செட்டி,
31—5—26. மானேஜிங் டைரக்டர்

சற்குருவே துணை.

ஸ்ரீ நமசிவாயகுரு தமிழ்சித்த ஆயுள் வேத வைத்தியசாலை, கோயமுத்தூர்.

இக் கோயமுத்தூரிலும் சென்னை முதலான விடங்களிலும் தீராதெனக் கைவிடப் பட்ட கோடிய வியாதிகளை வெகுசீக்கிரத்தில் சவுக்கியம் செய்து அநேக நற்சாக்ஷிப் பத்திரங்களும் பரிசுகளும் மெடல் சங்கிலி முதலியவை பெற்றவரும் ஸ்ரீ நமசிவாய குரு தமிழ் சித்த ஆயுள் வேத வைத்திய சாலை அதிபருமாகிய கோ. ந. முருகைய பண்டிதர் அவர்களால் தயார் செய்யப்பட்டு உலக பிரசித்தி அடைந்து வரும் ஔஷதங்கள்.

மேக ராஜாங்க மதன விந்தாதி லேகியம்.

மேலேகண்ட மேகராஜாங்க மதன விந்தாதி லேகியத்தை காலை மாலை இரு வேளையாக ஒரு மண்டலம் சாப்பிட்டு வருவதினால், 20 வகை மேகத்தை போக்கி திரேகத்தை பசும் பொன் போல் செய்வது மன்றி, சிலேற்பனம் 96ம் கிரந்தி, அரையாப்பு, சூலை, க்ஷயம், ஈளை இருமல், மந்தாரகாசம், காமாலை, சோகை, பாண்டு, குன்மம் 8-ம் கிரிச்சனங்கள் 6-ம் வாய்வு 26ம் பித்தம் 40-ம் இலிங்க புற்று, ஸ்திரிகளுக்கு யோனி புற்று, வெள்ளை, மஞ்சள் வெள்ளை, பிர மேகம் சொறி கரப்பான், மேக ஊறல், தண்டில் புண், கண்ட மாலை, மகோதிரம், நீராமை, கவுசி, உன்மாந்தை, அஸ்திஜுரம் அஸ்திவெட்டை, உஷ்ண வாய்வு அரோசகம், அன்னத்துவேசம் வாந்தி, விக்கல், கால்கை எரிவு, பெரும்பாடு, எலும்பு புருக்கி நோய், மூல வாயுவு, மூலத்தில் ரத்தம்,

இரு கிருப்பு மயக்கம், நித்திரை, ஸ்திரிகளுக்கு கெற்ப நோய் 7ம் ஸ்திரிகள் மலடியாயிருந்தால் கெற்பம், நீரடைப்பு, சதையடைப்பு, தூர்மாங்கிச அடைப்பு, சீதக்கடுப்பு, முதலான கொடிய ரோகங்களை சுகப்படுத்தி தேகம் சிவந்து மின்னும் இந்திரியம் இருகி கட்டும் இதை வயோதியர்கள் சாப்பிட்டு வருவார்களானால் ஜீவாதாரநரம்புகள் முருக்கேறி தாது விர்த்தியையும் ஆண்மையையும் உற்சாகத்தையும் தேகாரோக்கியத்தையும் ஆனந்த சுகத்தையும் கொடுப்பதில் இதற்கு நிகரான லேகியம் வேறேயில்லை யென்று உறுதியாய் கூறுகிறேன். ஆண் பெண் யாவர்களும் சாப்பிடலாம் ஒரு தரம் வாங்கி அநுபவிப்பீர்களானால் இதன் உண்மை நன்கு விளங்கும். பத்தியமில்லை.

48-நாள் சாப்பிடக்கூடிய லேகியம் சேர் 1-க்கு விலை 5-0-0
24-நாள் „ சேர் ½-க்கு விலை 2-8-0
12-நாள் „ சேர் ¼-க்கு விலை 1-4-0

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

குணத்திற் சிறந்தது! விலை குறைந்தது!! பரிமளமிகுந்தது!!!

சர்வ மேகங்களுக்கும் மகா ராஜாங்க சுகந்த பரிமளாதி ஸ்நானத்தைலம்.

மேலே கண்ட சுகந்த பரிமளாதி ஸ்நானத் தைலத்தை ஆண் பெண் யாவரும் ஸ்நானம் செய்து வருவதாலும் நித்தியம் தலையில் தடவி தலைவாரி வருவதினாலும் தீரும் வியாதிகள், மேகம், கீரவிவு, நீர் எரிச்சல், கிரிச்சனம், க்ஷயரோகம், கண்ணெரிவு, கண் புகைச்சல், கைகாலெரிவு, பிரமேகம், ரணம், கிரந்தி கற்றாழை நாற்றம், அஸ்திஜுரம், அஸ்தி வெட்டை, உள் வெட்டை, தாது நஷ்டம் பித்தத்தாலுண்டாகும் மயக்கம் புண் புரை முதலானவைகளும் குழந்தைகள் முதல் ஆண் பெண் யாவர்களும் தலைக்கு பத மிட்டு வாரி வந்தால், தலையில் மேகத்தினாலுண்டாகும் பொடு அதினால் சகிக்க முடியாத அரிப்புண்டாகி கோதுமை தவிடுபோல் உதிருகின்றதும் மாறிப்போகும். இந்த தைலமானது எங்கள் முன்னோர்களால் கையாண்டு வந்ததும் என் அநுபவத்துக்கு வந்து ஆயிரக்கணக்கான ரோகிகளுக்கு சகல வியாதிகளையும் சவுக்கியப்படுத்தி இருக்கிறேன். மேற்படி சுகந்த பரிமளாதி ஸ்நான தைலமானது யாதொரு நோய் வாராமல் பாது காப்பதோடு ராஜ கருவியாகிய மூளைக்கு குளிர்ச்சியையும் கண்களுக்கு பூரண சந்திரன் போன்ற குளிர்ந்த பிரகாசத்தையும் திவ்விய தேஜஸ்ஸையும் ஞாபக சக்தியையும் உற்சாகத்தையும் தேகாரோக்கியத்தையும் கொடுக்குமென்பதில் சந்தேகமில்லை. பத்தியமில்லை.

☞ 24-அவுன்ஸ் கோண்ட சீசா 1-க்கு விலை 5—0—0 ☞ 12-அவுன்ஸ் கோண்ட சீசா 1-க்கு விலை 2—8—0

☞ 6-அவுன்ஸ் கோண்ட சீசா 1-க்கு விலை 1—4—0 வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

வசந்த குஸுமாகர கஸ்தூரி வாய்வு குளிகை,

மேலேகண்ட கஸ்தூரி வாய்வு குளிகையானது தங்கம், வெள்ளி, முத்து, பவளம் தாம்பிரம் முதலாகியவைகளாலும் உயர்ந்த சரக்குகளாலும் பெரும்பாலும் சாஸ்திர ரீதியாய் மிக்க பிரயாசையுடன் யாவரும் எளிதிலடையும்படி சித்தம் செய்யப்பட்ட இந்த கஸ்தூரி வாய்வு குளிகையை உபயோகித்து வருவதினால் உஷ்ணத்தினாலுண்டாகும் வாய்வு, மாரடைப்பு, இடுப்புவலி, வயற்றுப்பிசம், நீர்கட்டு, பெண்களுக்கு கெற்பபையிலுமுள்ள ரணம், அதனால் சீழுண்டாகி வயற்றில் குத்தல், வெள்ளை விழுதல், சகிக்க முடியாத வயற்றுவலி, இவ்வித வியாதிகளுக்கு இங்லீஷ் வைத்தியர்கள் வயிற்றை ஆப்பிரேஷன் செய்து பார்க்காமல் நிவர்த்தி செய்ய முடியாதென்று முடிவு சொன்ன வியாதிகளை அநேகர்களுக்கு எங்களுடைய வசந்த குஸுமாகர கஸ்தூரி வாய்வு குளிகையினால் நாலு ஐந்து வேளையில் பூரண சொஸ்தப்படுத்தி அதனால் பரிசுகளும் மெடல்களும் சங்கிலி முதலானதும் பெற்றிருக்கிறேன்.

மேல்கண்ட வசந்த குஸுமாகர கஸ்தூரி வாய்வு குளிகை அற்புத குண முடையன என்பதிற் சற்றும் சந்தேகமில்லை.

☞ 12-மாத்திரை கோண்ட சீசா 1-க்கு விலை 1—4—0 வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

உபயோகப்படுத்தும் விபரம் மருந்துடன் அனுப்பபடும்.

☞ ஏஜண்டுகள் தேவை தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

மருந்து கிடைக்குமிடம்:—

பழனிவேல் பிள்ளை,

சோல் ஏஜண்டு, பெரிய கடை வீதி, கோயமுத்தூர்.

மின்சார ரசம்.

எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றது.

மின்சார ரசத்தின் குணம் எப்படி?

இது ஒரு அபூர்வமான! சஞ்சீவி. இதற்கு இயற்கையாகவே ஒரு வித மின்சார சக்தியுண்டு. எந்த வியாதிக்கும் துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். பாஷாண சம்பந்தமான சாக்குகள் இதில்கிடையாது

மின்சார ரசத்தின் விசேஷமென்ன?

மனிதர்களுக்கு வரும் எல்லா வியாதிகளையும் இந்த ஒரே மருந்து வெகு ஆச்சரியகரமாக குணப்படுத்துகிறது. உள்ளுக்கும் மேலுக்கும் இந்த ஒரே மருந்தை உபயோகிக்கலாம். எந்த விதமான அனுபானமு மில்லை. எவ்வித பத்தியமு மில்லை. பாலியர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும் எக்காலத்திலும்பயமின்றி உபயோகிக்கலாம்.

மின்சார ரசத்தின் அனுபோகம் எப்படி?

கை கண்ட மருந்து. ஆயிரக்கணக்கான ஜனங்கள் இதை தினந்தோறும் இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் உபயோகித்து வருவதே இதற்கு போதுமான சாக்ஷியாகும். வாங்கினவர்களே பலமுறை ஆர்டர் தருகிறார்கள்.

ஒரே முறை பரீக்ஷியுங்கள்! அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் அடங்கிய எங்கள் புது கேட்லாக் வேண்டுபவர்களுக்கு இனாமாக அனுப்பப்படும். இன்றைக்கே எழுதுங்கள்.

ஒரு புட்டியின் விலை ரூ. 2. தபால் செலவு வேறு.

மின்சார ரசம் கம்பெனி லிமிடெட், சேலம். (S. I.)

தந்தி விலாசம்:—'Rasamco', Salem.

இங்கிலீஷ் படிக்க அவலுடன் எதிர்ப்பார்த்திருந்த அன்பர்களே! ஏன் நீங்கள் கவலைப்படுகிறீர்கள்!!

23000 ஜனங்களுக்கு ஆங்கிலம் விரைவில் கற்றுகொடுத்தது

7-ம் பதிப்பு] இப்புத்தகம் ஒன்றேதான்!!! [7-ம் பதிப்பு

7000-பக்கங்கள் கொண்ட முழு கலிகோ பயிண்டு புத்தகம் விலை ரூ. 2. ஸ்ரீராமர் சீதா திருக்கலியாண படமும், பட்டாபிஷேக ஆட்டோன் படமும் உள்ளது.

"ஆங்கில ஆசான் அல்லது போதினி"

எமது ரிஜிஸ்டர்ட் "லேடி டிரேட் மார்க்கு" போட்டிருக்கும் புஸ்தகம் பார்த்து வாங்குங்கள்!

மோசம் போகாதீர்கள்.

தமிழ் தெரிந்தவர்கள் ஆங்கில பாஷையை ஆசிரியர் இல்லாமலே அதி சீக்கிரத்தில் பணச் செலவின்றி சுயமாகவும், சுலபமாகவும் கற்றுக்கொள்ளலாம். உலக அனுபவத்திற்கு வேண்டிய பல விவகாரங்களின் பதங்களைப் படிப்படியாக அநேக பாட முறைகளுடன் வெளியிடப்பட்டிருக்கிறது. கிராம முன்சீப், கர்ணம், கான்ஸ்டேபில்கள், கங்காணியர்கள், பட்லர்கள் முதலிய எல்லா தொழிலாளர்களுக்கும் மிகவும் முக்கியமானது.

23000-காப்பிகள் இது வரையில் செலவழிந்திருப்பதே: இதன் பெருமையையும் இன்றியமையா உபயோகத்தையும் விளக்கிக்காட்டும் எல்லா ஊரிலும் எல்லா புத்தக ஷாப்பிலும் கிடைக்கும். எல்லா இடங்களிலும் ஏஜண்டுகள் தேவை.

தி. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலைத் தெருவு, மதராஸ்

பண்டித எஸ். எஸ். ஆனந்தரின்

மஹா சந்தனாதித் தைலம்

தைலங்களுக்கெல்லாம் தலைமையானது!
வெயில் காலத்திற்கு மிகப்பயனுள்ளது!!

இம் மகா சந்தனாதித் தைலத்தை அரசர்களும் ஆங்கில மருத்துவர்களும், ஐக்கோர்ட் ஜட்ஜிகளும், வக்கீல்களும், கல்வி கற்கும் மாணவர்களும் ஆண்டு அநுபவித்து நற்குணங்களைப் புகழ்ந்து கூறியிருக்கிறார்கள். அவைகளை நமது மருந்து விலைப்பட்டியின் நன்மதிப் பிதழில் காணலாம்.

24-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 4—4—0
12-அவுன்ஸ் 2-4-0. 6-அவுன்ஸ் 1-3-0

தமிழ் மருத்துவ சாலை,
220 தங்கசாலைத் தெரு, சென்னை

இனாம் இனாம்!!

ரகஸ்ய ரத்னம்

அல்லது

வாழ்க்கை நலம் புகட்டும் நூல்.

வைத்திய அனுபவங்கள், வாழ்வின் மர்மங்கள், இரகசியக் குறிப்புக்கள், விவாகமானோர் அறிய வேண்டிய விஷயங்கள், பெண்களின் சம்பந்தமான பலவகை விவரங்கள் இல்லற சார சங்கிரகம் ஆகிய பலவும் அடங்கியது.

விலை இல்லை; தபால் செலவு இல்லை. விலாசம் தெரிவித்தால் மறு தபாலில் அனுப்பி வைக்கிறோம்.

அமிர்தம் அண்டு கோ.,
தபால் பெட்டி 222. மதராஸ்.

கோயமுத்தூர் ஸ்டார் பிரஸ் (லிமிடெட்) ஈரோடு பிராஞ்சு பிரசில் அச்சிடப்பெற்று ஈ. வெ. இராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது